விலை: 30.00 website: www.valampurii.lk
பக்கங்கள் : இருபது Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3234
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 09 திங்கட்கிழமை (22.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

## தமிழர்களுக்கு அநீதி இழைத்து ஜெனிவாவில் இலங்கையை இந்தியா ஆதரிக்கக்கூடாது

### மோடியிடம் ஸ்டாலின் வேண்டுகோள்



(சென்னை)
இலங்கைத் தமிழர்களை அவமதித்து - அவர்களுக்கு அநீதி இழைத்து - இலங்கை அரசின் கொடுங்கோன்மைக்கு ஆதர வான நிலைப்பாட்டை ஐ.நா.மனித பேரவை மன்றத்தில் இந்தியா எடுக்கக் கூடாது என இந்தியப் பிரதமர் மோடிக்கு, திமுக தலை வர் ஸ்டாலின் வேண்டு கோள் வைத்துள்ளார். 19

## விசாரணைக்குச் சென்ற பொலிஸ் மீது தாக்குதல்

### யாழ்.திருநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
உறவினர்களுக்கு இடையே இடம்பெற்ற முறுகல் நிலையை விசாரணை செய்வதற்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய 19

## கொரோனா மேலும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய 19

## இலங்கை மீதான பிரேரணை

# ஜெனிவாவில் இன்று பொது வாக்கெடுப்பு

## தமிழர்களுக்கு சாதகமாக அமையுமா?

*(ஜெனிவா)* ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை மீதான பிரேரணை இன்று விவா தத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்றைய தினமே பொது வாக் கெடுப்புக்கு விடப்படும்.

குறித்த வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக பல நாடுகள் வாக் களிக்கும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

*(03ஆம் பக்கம் பார்க்க)*



## கார் மோதியதில் குடும்பஸ்தர் பலி

### கிளிநொச்சியில் சோகம்

(கிளிநொச்சி)
மகளை தனியார் கல்வி நிலையத்துக்கு அழைத்துச் சென்ற தந்தை விபத்தில் உயிரிழந்துள்ளார்.
இதில் கிளிநொச்சி உமை யாள் புரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளை 19

## ஆட்டோவில் பேருந்தை துரத்தி சென்று ஏறிய தம்பதியினர்




### பசறை விபத்தில் பலியான சோகம்

(பதுளை)
பசறை 13ஆம் கட்டைப்பகுதி யில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேருந்து 19

## தமிழர் நிலம் அபகரிக்கப்பட்டதாலேயே ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது

### சர்வதேச மாநாட்டில் நீதியரசர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
1970களில் ஆயுத போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் கிழக்கு மாகாணத்தின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது.
எமக்கு எதிரான இந்த நில 19

### சுன்னாகம் மேற்குப் பகுதியிலுள்ள

## வீட்டுக்குள் வாள்களுடன் நுழைந்து குழு அட்டகாசம்

(குப்பிழான்)
சுன்னாகம் மேற்குப் பகுதியில் ஐயனார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வாள்களு டன் சென்ற இனம் தெரியாத குழு பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்ட பின்னர் அங் 19

### நல்லூரில் 7 பேர் உட்பட

## யாழில் நேற்றும் 11 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் நேற்றும் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.
இதில் யாழ்.மாவட்டத்தில் 11 பேரும் மன்னாரில் 3 பேரும் தொற்றுடன் அடை யாளம் காணப்பட் 19

## வீரசேகரவால் நாட்டுக்கு ஆபத்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)
அமைச்சர் சரத் வீரசேகர வால நாடு கடுமையான ஆபத் தில் இருப்பதாக அமைச்சர் கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தென்னி லங்கை ஆங்கில இணை யத்தளம் ஒன்று தெரிவித் துள்ளது.
வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன மற் றும் பலர் அமைச்சர் வீர சேகர மீது கடுமையான அதி ருப்தியை தெரி வித்துள்ளனர். 19

## இலங்கை மீதான பிரேரணை நிறைவேற்றப்படுமாயின் வெளிநாட்டுப் படைகள் இலங்கையில் கால்வைக்கும்

### ஐ.நாவுக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதி தமரா எச்சரிக்கை



(ஜெனிவா)
ஐக்கிய நாடுகள்மனித உரிமை கள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் பிரித்தானிய தலைமையிலான இணை அனுசரணை நாடுகள்முன்வைத் துள்ள பிரேரணை நிறைவேற் றப்படுமாயின் இலங்கையில் வெளிநாட்டு படைகள் தங்கு தடையின்றி பிரசன்னமாகலாம் என்று ஐ.நாவுக்கான முன்னாள் வதிவிடப் பிரதி நிதி தமரா குணநாயகம் தெரிவித்தார்.
நிறைவேற்றப்படும் பிரேரணை தமிழ் மக்களின் விடயங்களுக்கு பொறுப புக் கூறுவதற்கானது என்று விம் 19

# சேவைநலன் பாராட்டு



திருமதி
## தெய்வமலர் தர்மகுலசிங்கம்
[ B.Sc (Chemistry), PGDE, SLTS - 1]

Best Wishes

(6274)

சேவைக்காலம்
யா / இடைக்காடு ம.வி (1990.03.09 - 2012.10.16)
யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி (2012.10.17 - 2021.03.22)

ஓய்வுக்காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை நலன்புரிக் கழகம்**
**யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**

---

Official IDP IELTS Referral Agent

idp | IELTS Register Here

**Looking for a Desired BAND SCORE in IELTS EXAM**



FREE ADMISSION

WHAT WE COVER
- IELTS Tips
- IELTS Exam tips by IELTS Experts
- Individual discussion

& College/University Admission For UK, Canada, USA and Australia Career Guidance and other services

ApplyBoard

- Applyboard country representative Live Speaking in English & Tamil
- Individual discussion

27th March 2021
Green Grass Hotel
1.00 pm - 5.00 pm
Contact
0777516816
0741887878

(C-1784)

**Limited Participants !!!**

Refreshment Will Be Provided

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

---

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நவாலி வீதி, மூத்த விநாயகர் கோவில் வீதி மெயின் றோட்டில் 04 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.


**தரகர் தேவையில்லை.**
காணி பார்வையிடும் நேரம்
காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

(6275)

**குரு : 077 468 3354, 077 288 0152**

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணக வாழ்வில் | விண்ணக வாழ்வில் |
|---|---|
| 16 - 10 - 1934 | 02 - 04 - 2020 |

அமரர்
## திரு. செ. சின்னையா (பாலசிங்கம்)
( குருந்தடிப் பிள்ளையார் ஆலய உரிமையாளர், முன்னாள் தலைவர் )

ஆண்டொன்று ஓடி மறைந்ததையா
ஆனாலும் ஆறவில்லை என் நெஞ்சம்.
ஆற்றுவாரும் இல்லை என்னைத்
தேற்றுவாரும் இல்லை ஐயா - என்னைத்
தனியே தவிக்கவிட்டு நீங்கள்
தனி வழியே போனதென்ன?
கண்ணீர்விட்டு என்னாளும்
கலங்கி நிற்கிறேனே என் உயிரே!

அப்பா, தாத்தா, அப்பப்பா என்று நாங்கள் வந்தபொழுதெல்லாம்
கட்டி முத்தம் தந்து அணைப்பீர்களே!
உங்கள் கையாலேயே அழகழகான விளையாட்டுப் பொருட்கள்
செய்து தந்து மகிழ்விப்பீர்களே!
இன்று எல்லோரையும் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா?

குட்டிக் குட்டி கும்பிட்டுக் கும்பிட்டு குறுந்தடியான்
பாதம் சேர்ந்து விட்டீர்களே!
என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6273)

**குருந்தடிப் பிள்ளையார் கோவிலடி,**
**சுதுமலை தெற்கு.**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.02.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
*அமரர்*
## வேலாயுதபிள்ளை கனகரத்தினம் (சந்திரன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.03.2021) செவ்வாய்க் கிழமை அதிகாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று 5.30 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி சஞ்சயனம் செய்யப் படும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந் திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**வரணி, இயற்றாலை,**
**வரணி.**

(C-1781)

***இங்ஙனம்***
**குடும்பத்தினர்**

# ஐ.நா.தீர்மானத்தை நிராகரித்தால் மேலும் நெருக்கடிகள் அதிகரிக்கும்

## கலாநிதி தயான் ஜயதிலக



**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய பிரேரணையில் இலங்கை பற்றி மீளாய்வுக்காலம் ஆறுமாதங்களாக சுருக்கப்பட்டுள்ள நிலையில் அப்பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக நிராகரித்தால் மேலும் மேலும் நெருக்கடிகளே அதிகரிக்கும் என்று ஐ.நாவுக்கான முன்னாள் வதிவிடப்பிரதிநிதியும் எதிர்க்கட்சித்தலைவரின் சர்வதேச உறவுகளுக்கான சிரேஷ்ட ஆலோசகருமான கலாநிதி.தயான் ஜயதிலக தெரிவித்தார்.**

தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் நிறைவேற்றப்படும் இலங்கை பற்றிய தீர்மானத்தினை நிராகரிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, வெளிவிவகார செயலாளர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோர் தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அறிவதற்காக நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முறையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை உள்ளிட்ட நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்காது.

இலங்கை பற்றிய மீளாய்வு அறிக்கையினை சமர்ப்பிக்கும் காலம் ஆறு மாதங்களாக சுருக்கப்பட்டுள்ளது.

ஆகவே அரசாங்கம் நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களுக்கான செயற்பாடுகளைக் காண்பிக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் மேலும் மேலும் நெருக்கடிகளே ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகரிக்கும்.

தற்போதைய நிலையில் ஆட்சியாளர்களுக்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன.

முதலாவதாக முற்றாக ஐ.நா. தீர்மானத்தினை எதிர்த்து சர்வதேசத்தினைப் பகைத்துக்கொண்டு நடைபெறுவதற்கு முகம்கொடுப்பதாகும்.

இரண்டாவதாக, மாகாண சபைமுறைகளின் அதிகாரங்களை நீக்கி தேர்தலை நடத்திவிட்டு பின்னர் புதிய அரசியலமைப்பின் பெயரில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நீக்கிவிட்டு அதிகாரக்குவிப்பைச் செய்து இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தினை காலங்கடத்தி ஏமாற்றுவதோடு அவ்வப்போது நெருக்கங்களையும் விரிசல்களையும் காண்பித்து சீரற்ற நிலைமைகளை பேணுதல். அதுமட்டுமன்றி இனக்குழுமங்களை மையப்படுத்திய நெருக்கடிகளை ஏற்படுத்துதல்.

மூன்றாவதாக, நிலைமைகளைப் புரிந்து ஐ.நா. தீர்மானத்திற்கு அமைவாக உள்நாட்டில் தேசிய ரீதியிலான வெளிப்படைத்தன்மையுடனான பொறிமுறையொன்றை ஏற்படுத்தி ஒவ்வொரு ஆறு மாதகாலத்திற்கும் மீளாய்வு செய்யப்படும் போது முன்னேற்றகரமான நிலை மைகளை வெளிப்படுத்தல்.

இந்தத் தெரிவுகளுக்குள் ஒன்றைகையிலெடுக்கும் போது அதற்கான பிரதிபலன்களும் உடனுக்குடனே கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இலங்கை குறித்த பிரேரணை இன்று விவாதத்திற்கு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 46 அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை குறித்த பிரேரணை, இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பெரும்பாலும், பிரேரணை மீதான வாக்கெடுப்பும் இன்றே இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு என்ற தலைப்பிலான குறித்த யோசனை, பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, வடக்கு மெஸிடோனியா, மொன்டினீக்ரோ மற்றும் மலாவி ஆகிய நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ளன.

விவாதத்தின் இடைநடுவே, சில நாடுகள் தலையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுவதால், பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளை பிற்போடப்படலாம் என வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

47 உறுப்பு நாடுகளை கொண்ட ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில், குறித்த பிரேரணை தொடர்பில், தமது நட்பு நாடுகளுக்கு அறிவுறுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய விசேடமாக இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய வலய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா இது குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்காத போதிலும், பெரும்பாலும் வாக்களிப்பில் இருந்து விலகி இருக்கும் என நம்பப்படுகிறது.

ஏற்கனவே, இலங்கை தொடர்பிலான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விமர்சித்துள்ளன.


இலங்கைக்கு எதிரான பிரேரணை, குறித்த அறிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதாக அந்த நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன.

இந்தநிலையில், மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிக்க பாகிஸ்தான் தீர்மானித்துள்ள தாக அந்த நாட்டின் த இன்டர்நஷனல் செய்தித்தளம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் மூன்று ஆண்டு கால உறுப்புரிமைக்காக கடந்த ஜனவரி மாதம் பாகிஸ்தான் மீள தெரிவானது.

இலங்கை தொடர்பில், இதற்கு முன்னதாக முன் வைக்கப்பட்ட பிரேரணை களின் போது, அதற்கு எதிராக பாகிஸ்தான் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 474 தொற்றாளர்கள் அடையாளம்



(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட 1200 பி.சி.ஆர் பரிசோதனைகளில் 474 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட விரைவான சீரற்ற ஆன்டிஜன் பரிசோதனைகளின் போது 20 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டது.

அதைத் தொடர்ந்தே 1200 ஊழியர்களிடத்தில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி-4)

# புதுவருட கொண்டாட்டத்தின் போது சுகாதார விதிமுறைகளை பின்பற்றவும்

(கொழும்பு)

புதுவருட கொண்டாட்டத்திற்காக தயாராகும் போது உரிய சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அடுத்த சில வாரங்களில் தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு கொள்வனவுகளில் ஈடுபடுவோரை மிக அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

அனைத்து விற்பனை நிலைய உரிமையாளர்கள், முகாமையாளர்கள் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப ஸ்தாபனத்தை நடத்திச் செல்ல வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழிநுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை பணிப்பாளர் நாயகம்,கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், த.பெ.இல 13,கெடம்பே, பேராதனை எனும் முகவரிக்கு 2021.04.16 ஆம் திகதிக்கு முனனர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.மேலதிக தகவல்களுக்கு 21 ம் திகதி நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியான வர்த்தமானி அறிவித்தலைப் பார்வையிடவும். (நி-4)

# விராட் அதிரடி ஆட்டம் தொடர் இந்தியா வசம்!




இந்திய- இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையே 5 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடியது. இதில், முதலாவது மற்றும் 3ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்தும், 2ஆவது, 4ஆவது ஆட்டத்தில் இந்தியாவும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இந்த நிலையில் தொடரை வெல்வது யார்? என்பதை தீர்மானிக்கும் கடைசி 20 ஓவர் போட்டி அகமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்திய அணி முதலில் பட்டிங் செய்தது. ஆரம்ப வீரர் ரோகித் சர்மா, கப்டன் கோலி இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் 20 ஓவர் முடிவில் இந்தியா 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 224 ரன்கள் குவித்தது.

அதிகபட்சமாக கப்டன் விராட் கோலி ஆட்டமிழக்காமல் 80 ரன்கள் விளாசினார். ரோகித் சர்மா 64 ரன்கள் குவித்தார். சூர்ய குமார் யாதவ் 32 ரன்கள், ஹர்திக் பாண்ட்யா 39 ரன்கள் எடுத்தனர்.

இதையடுத்து 225 ரன்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் ஓவரிலேயே தடுமாறியது. ஆரம்ப வீரர் ஜேசன் ராய் ரன் எதுவும் எடுக்காமல் புவனேஷ்வர் குமாரிடம் விக்கெட்டை பறிகொடுத்தார். அதன்பின்னர் ஜோஸ்பட்லர்-டேவிட் மாலன் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

அதிரடியாக ஆடிய ஜோஸ் பட்லர் 34 பந்துகளில் 52 ரன்கள் குவித்தார். இதே போல் டேவிட் மாலன், 46 பந்துகளில் 68 ரன்கள் விளாசி நம்பிக்கை அளித்தார். அவர்களைத் தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் நிலைக்காததால் ரன்ரேட் வெகுவாக சரிந்தது.

20 ஓவர் முடிவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் இழப்பிற்கு 188 ரன்களே பெற்றது. இதனால் இந்தியா 36 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் 5 போட்டிகள் கொண்ட தொடரை 3-2 என கைப்பற்றியது.

இந்த போட்டியில், இந்தியா தரப்பில் புவனேஸ்வர் குமார் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். ஷர்துல் தாக்கூர் ஒரே ஓவரில் 2 முக்கிய விக்கெட்டுகள் உள்ளிட்ட 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இது ஆட்டத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. தமிழக வீரர் நடராஜன், ஹர்திக் பாண்ட்யா ஆகியோர் ஒரு விக்கெட் எடுத்தனர். (4)

# சித்திவிநாயகர் விளையாட்டுக்கழக கடினப்பந்து சுற்றுப்போட்டி



மன். சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் குமரையா முத்துக்குமார் நினைவாக சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள 10 அணிகளைக் கொண்ட கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ப.கரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நானாட்டன் பொது மைதானத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த போட்டியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 10 உள்ளூர் அணிகள் கலந்து கொள்வதுடன் 30 ஓவர்களை கொண்ட லீக் போட்டியாக சனி,ஞாயிறு தினங்களில் இடம் பெறவுள்ளது.

குறித்த சுற்று போட்டியின் ஆரம்ப நிகழ்வில் மன். சித்தி விநாயகர் இந்துக் கல் லூரியின் பிரதி அதிபர் மயூரன், நானாட்டான் பிரதேச சபை உப தவிசாளர் லூர்த்து நாயகம்பிள்ளை, முருகன்கோவில் குருக்கள் சிவஸ்ரீ.மகாதர்ம குமார குருக்கள், மன்னார் மாவட்ட கடினப்பந்து சபையின் தலைவர் பர்னாந்து அருள் உட்பட போட்டியில் பங்குகொள்ளும் அணிகளின் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-4-285)

## மரண அறிவித்தல்

### பூமணி வடிவேலு



மாவைகலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி வடிவேலு நேற்று (21.03.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லியன் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வடிவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சாணையன் - பூதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் இராஜசுலோசனா, தயாநிதி, நீதிராசா, மகேசன், இராஜேஸ்வரி, ரஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவளராணி, வரதராசா, மங்களேஸ்வரி, சுமணவதி, விஜிதா, பாஸ்கரன், காலஞ்சென்ற றெஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6277)

மாவைகலட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:-
குடும்பத்தினர்

# ரட்ணமின் அசத்தல்; யாழ்.ஜொனியன்ஸ் இறுதிப் போட்டிக்கு தெரிவு

வி.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ். ஜொனி யன்ஸ் அணி, பற்றீசியன்ஸ் அணியை ஒரு இலக்கி னால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக் குத் தகுதிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத் தாடிய போது 50 ஓவரில் 9 இலக்குகளை இழந்து 239 ஓட்டங் களைப் பெற்றது.

டிலக்சன்-23, பியறிக்-14, கீதன்-39,டனீசியஸ்-10, கவஸ் கர்-18, மைக்கல்-21, நோபேட்-58 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ். ஜொனியன்ஸ் சார்பாக அபிநாஸ்-04, லவேந்திரா-03, சௌமி-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 49.5 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

சௌமி-14, அமுதயன்-18, ரட்ணம்-69, அபிநாஸ்-19, லவேந்திரா-14, கிஸாந் ஆட்ட மிழக்காது-27, பிருந்தா-13 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் பற்றீசியன்ஸ் அணி சார்பாக மைக்கல்-01, டனீசியஸ்-04, நோபேட்-01, கவஸ்கர்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி இறுதிப்போட்டியில் பல்கலைக்கழக அணியை எதிர்கொள்வர் என்பது குறிப் பிடத்தக்கது.

இப்போட்டியின் மூலம் யாழ். நகரில் 12 வருடங்களாக நடத்திவரும் சிறந்த கழக அணித் தெரிவுக்கு Rating யாழ். ஜொனியன்ஸ் அணி 8.45 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 3.29 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (4)

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும்

## முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் வலியுறுத்து

(டில்லி)

**ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.**




இந்த விடயம் தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், "ஐ.நா. பாதுகாப்பு சபையில் இலங்கை அரசின் மனித உரிமை மீறலுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வருவது பரிசீலனையில் உள்ளது.

ஐ.நா.பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும்.

தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்து இலங்கைத் தமிழர்களின் பக்கம் நிற்க வேண்டும்" என அவர் பதிவிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் தற்போது ஜெனீவாவில் இடம்பெற்று வரும் நிலையில், இலங்கையில் இறுதிக்கட்ட போரின்போது தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசை பொறுப்பேற்குமாறு வலியுறுத்தும்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இலங்கைக்கு எதிரான இந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட நாடுகளிடம் இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**கிருஷ்ணன் பரமேஸ்வரி**

(திதி - பூர்வ பக்க நவமி)

எங்கள் ஆருயிர் அன்னையே!
கண்ணை இமை காப்பது போல
ஐவரையும் காத்தீரே!
அவனியிலே எங்களை
தலை நிமிர்ந்து வாழ வைத்தீரே!
நாங்கள் உயிர் வாழும் வரை
உங்கள் நினைவுகளை சுமந்து வாழ்வோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உலவிற்குளம் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

உதயம் 15.09.1935

அஸ்தமனம் 02.04.2020

(6263)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

நா.சர்வானந்தன் (மருமகன்)
077 905 3842

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

## ஆத்மார்த்தமான கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரிய நலன்புரிக்கழக
உறுப்பினர் திருமதி **ஞானஸ்பதி கணேசலிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**நாகம்மா விஸ்வலிங்கம்**

அவர்கள் 20.02.2021 அன்று இறைவனடி
சேர்ந்ததையிட்டு அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-1774)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி நிகழ்வும்



பிறப்பு 24.04.1970

இறப்பு 20.02.2021

அமரர்

திரு. **இரட்ணவேலாயுதம் ராஜேந்திரன்**

22.03.2021 இன்று அந்தியேட்டி நிகழ்வு பிரான்ஸில்
அவரது இல்லத்திலும் வேலணையில் அவரது
துணைவியார் இல்லத்திலும் நடைபெறுகிறது.
உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

077 566 4561

(C-1777)

உன் பிரிவால் துயருறும்
நண்பர்கள்

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06.04.1957

உதிர்வு 02.04.2020

அமரர்

**சிவகுருநாதன் இந்திராணி**

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கி
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள்
நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.


அந்திரான்
கரணவாய் மேற்கு, கரவெட்டி

(C-1779)

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# அஜினோமோட்டோ ஆபத்தானது

## எச்சரிக்கின்றார் மருத்துவர் சிவன்சுதன்




(யாழ்ப்பாணம்)

**அதிகரித்த அஜினோமோட்டோ பாவனை பல சுகாதார பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகிறது என யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் மருத்துவர் எஸ்.சிவன்சுதன் எச்சரித்துள்ளார்.**

அஜினோமோட்டோ என்பது மலிவானதும் சுவை நிறைந்ததுமான ஒருவகை உப்பு. இது 100 வருடங்களுக்கு மேலாக மனிதனின் உணவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால் கடந்த சில வருடங்களாக இது சம்பந்தமாக இடம்பெற்ற ஆய்வுகளில் அதிகரித்த அஜினோமோட்டோ பாவனை பல சுகாதார பிரச்சினைகளுக்குகாரணமாக அமைகிறது என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றன.

இதிலே காணப்படும் இரசாயனப்பதார்த்தம் மொனோ சோடியம் குழுடாமேற் (Mono sodium glutamet) எனப்படும் ஒருவகை உப்பு ஆகும்.

இது பலவகையான உணவு வகைகளிலே அதிகமாக சேர்க்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நூடில்ஸ் வகை, சூப்வகை, பதப்படுத்தப்பட்ட உணவுவகைகள், தகரங்களில் அல்லது பொதிகளில் அடைக்கப்பட்டு வரும் உணவுவகைகள், கடைகளில் விற்பனையாகும் பல உடன்உணவு வகைகள்போன்றவற்றில் அதிகளவு அஜினோமோட்டோ சேர்க்கப்பட்டு வருகிறது.

அதிகரித்த அஜினோமோட்டோ பாவனை தலையிடி, படபடப்பு, உடல் எரிவு, விறைப்பு, நித்திரை குறைவு, அதிகரித்த வியர்வை, வாந்தி, களைப்பு போன்ற பல அறிகுறிகளை ஏற்படுத்த முடியும் என்று ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

அத்துடன் அஜினோமோட்டோ ஆனது பசியைக் கட்டுப்படுத்தும் லெப்ரின் என்ற ஓமோனை நிரோதிப்பதால் பசி அதிகரித்து உடல்நிறை அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

அஜினோ மோட்டோ ஆனது அன்றிஒக்சிடென்ற் இன் தொழிற்பாட்டை நிரோதிப்பதன் மூலம் இரைப்பை, குடற்புற்றுநோய்கள் ஏற்படுவதற்கும் இது காரணமாக அமையலாம் என்று சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கர்ப்பகாலங்களிலே இதன் பாவனை சிசுவுக்கு பாதுகாப்பானது அல்ல என்பதும் ஆண்களிலே இது மலட்டுத் தன்மைக்கு ஒரு காரணியாக அமையலாம் என்பதும் சில அவதானிப்புகள் மூலம் அனுமானிக்கப்பட்டிருக்கிறது.


அஜினோமோட்டோவில் சோடியத்திறனுடைய செறிவு அதிகமாகக் காணப்படுவதால் குருதி அமுக்கத்தை அதிகரிக்கச் செய்வதுடன் உடல்வீக்கத்திற்கும் இது காரணமாக அமையலாம். சிலரில் இது ஆஸ்துமா எனப்படும் முட்டுநோய் கடுமையாவதற்கும் காரணமாக அமைகின்றது.

அளவான அஜினோ மோட்டோ பாவனை பலரில் எதுவித தாக்கங்களையும் ஏற்படுத்தாத காரணத்தால் இது ஒரு தடைசெய்யப்பட்ட உப்பு என்று சுகாதார நிறுவனங்களால் அறிவிக்கப்படவில்லை. ஆனால் கட்டுப்படுத்தப்படாத இதன் அதிகரித்த பாவனை சம்பந்தமாக சுகாதார தரப்பினர் கரிசனை காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

அதிகம் நாள் உள்ள சில உணவு வகைகள் குறிப்பாக சில நூடில்ஸ் வகைகள் சில நாடுகளில் தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

எமது பகுதிகளில் விற்பனையாகும் பலவகையான உணவுப்பொருட்களில் அஜினோமோட்டோவின் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. சமையலின் பொழுதும் உணவின் சுவையை அதிகரிப்பதற்காக அஜினோ மோட்டோ சேர்க்கப்பட்டுவருவது அவதானிக்கப்பட்டு வருகிறது.

எனவே அதிகரித்த அஜினோமோட்டோ பாவனை சம்பந்தமாகவும் அதன் தீய விளைவுகள் சம்பந்தமாகவும் பொது மக்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இதன் பாவனையை இயன்றளவு குறைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு வெள்ளிக்கிழமை, பல்கலைக்கழக நலன்புரிக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், பணியாளர்கள் உட்படப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.

(படம்: சிவசாந்தன்)

# வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மாசேரி கிழக்கு குருநாதர் கோவில் வீதியானது பதினைந்து வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்பும் இன்றி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். மழைகாலங்களில் இவ் வீதியைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது.


கடந்த காலங்களில் இந்த வீதியைப் புனரமைக்குமாறு அரச அதிகாரிகள், பிரதேச சபையினர் மற்றும் அரசியல்வாதிகளிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதுவரைக்கும் இவ் வீதி புனரமைக்கப்படவில்லை. எனவே உரிய தரப்பினர் குரு நாதர் கோவில் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)

# வீதிகளுக்கு அடிக்கல் நாட்டல்

(சாவகச்சேரி)

ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் எட்டு கிராமிய வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.



அந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 1.225 கிலோமீற்றர் நீளமான மிருசுவில் வடக்கு மன்னங்குறிச்சி வீதி 44.1 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும், 0.645 கிலோமீற்றர் நீளமான உசன்-தவசிக்குளம் இணைப்பு வீதி 7.99 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும் காப்பெற் வீதிகளாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அடிக்கல் நாட்டி வைத்தார்.

மேலும் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க.வாமதேவன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதே வேளையில் குறித்த தினத்தில் யாழ்.மாவட்டத்தில் மாதகல் லூர்த்து மாதா வீதி, உடுவில் நாகம்பாள் கோவில் வீதி, நீர்வேலி ஒல்லை வைரவர் வீதி, கொழும்புத்துறை கெல்லந்தோட்டம் மூன்றாம் குறுக்கு வீதி, அல்லைப்பிட்டி சிந்தாமணி பிள்ளையார் கோயில் வீதி மற்றும் பருத்தித்துறை விஸ்வநாதர் வீதி ஆகிய எட்டு வீதிகளே இவ்வாறு காப்பெற் வீதிகளாக மாற்றியமைப்பதற்காக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளன. (5-4-30)




# ஆன்மிக உரை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு பழைய வீதி அருள்மிகு ஞான வைரவர் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

12 தினங்கள் நடைபெற்று வரும் இவ் உற்சவத்தில் தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை "இந்துமதம் காட்டும் ஆன்மிகம்" எனும் தலைப்பில் காரை.எம்.பி. அருளானந்தன் ஆன்மிக உரையாற்றுவார். (5-4)

# விபத்தில் அர்ச்சகர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்ற விபத்தில் பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய அர்ச்சகர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளை இராணுவ வாகனம் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்த இவரை படையினர் தமது வாகனத்தில் ஏற்றிச்சென்று வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (5-4-18-78)

# சரத் வீரசேகரவால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமானவை ஆனாலும் பாரதூரமானவை

## அநுரகுமார குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் போது அவற்றை மறைப்பதற்காக அமைச்சர் சரத் வீரசேகர செய்திகளை உருவாக்குவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அவரால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் சிறுபிள்ளைத்தனமானது என்ற போதிலும், அவை பாரதூரமானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் எதிர்காலத்தில் அநுரகுமார திஸாநாயக்கவும் வாக்குமூலமளிக்க வேண்டியேற்படும் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளமைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. இது தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சுமார் 15 மாதங்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

சரத் வீரசேகர அல்லது அரசாங்கத்திலுள்ள எவரும் இதுவரையில் ஆணைக்குழுவிற்குச் சென்று என்னிடம் வாக்குமூலம் பெறப்பட வேண்டும் என்று கூறவில்லை.

அத்தோடு குற்ற விசாரணை பிரிவும் இதுவரையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் என்னிடம் வாக்குமூலம் பெற வேண்டும் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிடாத நிலையில் , திடீரென சரத் வீரசேகரவிற்கு என்னைப்பற்றிய ஞாபகம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 62 செவ் 7 சூரி 11 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L, சொந்த ஆட்டோ<br>எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண்<br>தொ.இ: B/11636 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 45 ' செவ்,சூரி 7 ல்<br>தகைமை/தொழில்: B.A,A.A.T, Work-இலங்கை மின்சாரசபை<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer, உயர்ந்த பட்டம் பெற்ற கௌரவமான தொழில்,வெளி நாடும், வீடு உண்டு.<br>தொ.இ: G/2573 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ் 9 சூரி 5 ல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: O/L, printer Owner<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், வெளி நாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11638 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 34 ' செவ் 2 சூரி 5 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளி நாடு, உள் நாடு - அரச உத்தியோகம், வீடு உண்டு<br>தொ.இ: G/2586 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 02 செவ் 11 சூரி 1 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Engineer (PR உண்டு, லண்டன்,அரச உத்தியோகம்)<br>எதிர்பார்ப்பு: உள் நாடு,வெளி நாடு<br>தொ.இ: B/11639 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 42 ' செவ் 1 சூரி 4 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L தையல<br>எதிர்பார்ப்பு: வியாபாரம், தோட்டம், அரச உத்தியோகம். வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/2590 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 30 செவ் 8 சூரி 9 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, விவசாய கந்தோர்<br>எதிர்பார்ப்பு: சாதரண அரச உத்தியோகம்<br>தொ.இ: B/11640 | பிறப்பு: 1971 இந்து நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 54 செவ் 8 சூரி 5 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் அல்லது வியாபாரம், வெளி நாடு, விவாகரத்து வேண்டாம்.<br>தொ.இ: G/2605 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

பத்மநாதன் மயூரன்,
பிடாரி கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்.

-வழக்காளி-

வழக்கு இல. விசேடம்/20/2021

எதிராக

1. R.E. ஆனந்தராசா,
தலைவர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3. இ.கி. அமல்ராஜ்
தெரிவத்தாட்சி அலுவலர்
நல்லூர் பிரதேச சபை,
தேர்தல்கள் அலுவலகம்
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 01.04.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6245)

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

சிவகாந்தன் தனூஜன்,
இல. 174/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

-வழக்காளி-

வழக்கு இல. விசேடம்/20/2021

எதிராக

1. R.E. ஆனந்தராசா,
தலைவர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3. இ.கி. அமல்ராஜ்
தெரிவத்தாட்சி அலுவலர்
யாழ்ப்பாணம் மாநகரசபை
தேர்தல்கள் அலுவலகம்
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 31.03.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6246)

# முல்லைத்தீவு நகரில் அமைக்கப்பட்ட கடைகளுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கேள்வி கோரல்

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு நகரில் அமைக்கப்பட்ட கடைகளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கேள்வி கோரல் விடுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த செயற்பாட்டுக்கு பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

முல்லைத்தீவு நகரில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் கட்டப்பட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் வழங்கப்பட்டுள்ள பேருந்து தரிப்பிட நிலையத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கடை கட்டடங்கள் கட்டப்பட்டு பிரதேச சபையிடம் கையளிக்கப்படவுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த கட்டடங்கள் சபையிடம் கையளிக்காத நிலையில் கொழும்பில் இருந்து நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கேள்வி கோரல் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் கண்டனத்தினையும் எதிர்ப்பினையும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் நடவடிக்கை எடுக்காத நிலையில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் ஊடக சந்திப்பு ஒன்றினை நடத்தி குறித்த விடயத்துக்கு எதிர்ப்பினை வெளியிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நகரில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள பேருந்து தரிப்பிட நிலையத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 13 கடை தொகுதிகள் கட்டப்பட்டு பிரதேச சபையிடம் கையளிக்கப்படவுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த கட்டடங்கள் சபையிடம் கையளிக்காத நிலையில் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கேள்வி கோரல் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த குத்தகைக் கோரலை நகர அபிவிருத்தி சபை நிறுத்தி அதனை பிரதேச சபையிடம் ஒப்படைத்து உரியமுறையில் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். இவ் விடயம் தொடர்பில் ஆளுநர், பிரதம செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

இதை பிரதேச சபையிடம் ஒப்படைத்து பிரதேசத்திற்கு உட்பட்ட மக்களுக்கு பயன் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கையினையும் எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-281)

## மினி சூறாவளியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி தீர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் வீசிய மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியில் கனமழையுடன் வீசிய மினி சூறாவளியினால் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் இரண்டு தற்காலிக வீடுகள் முழுமையாகவும் மூன்று நிரந்தர வீடுகள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளன. கரைச்சி பிரதேச செயலகத்தின் கவனத்திற்கு குறித்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கையை பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது.

இதேவேளை உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அவர்களுக்கான உடனடி உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டு இருப்பதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (5-4-315)

## மணல் அகழ்வு தொடர்பான வழக்கு நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது

(மன்னார்).


மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் ஒழுங்கமைக்கப்படாத மணல் அகழ்வு அனுமதிகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மக்களாலும் பிரதேச சபை உறுப்பினர்களாலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அதனையடுத்து கடந்த மாதம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு வினால் அனைத்து வித மணல் அகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டதுடன், மணல் அகழ்வு தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்டதன் பின்னர் அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் நானாட்டன் பிரதேச சபை உறுப்பினர் றொஜன்ஸ்ராலின் தனக்கு வழங்கப்பட்ட மணல் அகழ்வுக்கான அனுமதி புதுப்பிக்கப்படவில்லையென மன்னார் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் சுரங்கம் மற்றும் அகழ்வுக்கு பொறுப்பான அதிகாரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் விசாரணை இடம் பெற்றது.

குறித்த வழக்கில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதோடு, தனிநபர் பிராது என்ற அடிப்படையில் குறித்த வழக்கை முறைப்பாட்டுக்காரர் கை வாங்கினார். (5-4-285)



157 ஆவது பொலிஸ் வீரர்கள் தின நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிரதேச பொலிஸ் நிலையங்களில் இடம் பெற்றன.

(படம்- யதுபாஸ்கரன், சிவசாந்தன், வசந்தரூபன்)

## வாள்வெட்டு; இருவர் படுகாயம்


(நெளுக்குளம்)

வவுனியாவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் இரவு மகளும், மனைவியும் வீட்டில் இருந்த வேளை வாள் வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இதில் படுகாயமடைந்த அவர்கள் வவுனியா வைத்திய சாலையின் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

வாள்வெட்டில் ஈடுபட்ட நபர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-299)



"வெடிபொருள் ஆபத்தில் இருந்து எம்மை நாம் பாதுகாப்போம்" என்னும் தொனிப்பொருளில் சார்ப் மனிதநேயக்கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை வெற்றிலைக்கேணி பரமேஸ்வர வித்தியாலயத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில் சார்ப் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் பிரபாத் நாரம்பன மற்றும் தேசிய மிதிவெடி செயற்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட அலுவலர் மேஜர் பெரோரா மற்றும் கிராம உத்தியோகத்தர், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சார்ப் நிறுவனத்தின் ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படம்-யதுபாஸ்கரன்)

# இராசிபலன்

22.03.2021
பங்குனி 09, திங்கட்கிழமை
நவமி முழுவதும்
திருவாதிரை மாலை 6.14 மணிவரை
சுபநேரம் 12.17-1.47 மணிவரை
இராகுகாலம் 7.47-9.17 மணிவரை
சந்திராஷ்டமம்: அனுசம், கேட்டை
சித்தாமிர்தம்

வளவன்


மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.


ரிஷபம்

காலை நேரத்திலேயே கலகலப்பான செய் திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.


மிதுனம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.


கடகம்

பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்து செலவுகளும் ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், சயனசுகக் குறைவான நாள்


சிம்மம்

தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும்.


துலாம்

விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலையுருவாகும், பணப் பற்றாக்குறையுண்டு.


தனுசு

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


கும்பம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.


மீனம்

வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் மேலோங்கும், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும்.

தன்னைக் கண்டித்துக் கொள்பவர்கள் மகிழ்ச்சியில் திளைப்பார்

# தமிழகத்தில் உள்ள எட்டுக்கோடி தமிழர்களின் இதயக்குமுறலை அலட்சியப்படுத்த வேண்டாம்

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்

(சென்னை)

இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசுக்கு துணை போனால் தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள் என மறுமலர்ச்சி தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கையில் இனப்படுகொலை நடத்தி. 2009 ஆம் ஆண்டில் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷ அரசை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்று உலகத் தமிழினம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றது.

ஐ.நா. மனித உரிமை மன்றம் 2015 இல் சிங்கள இனவாத அரசு நடத்திய படுகொலைகள், போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு மனித உரிமைச் செயற்பாட்டார்களையும் இணைத்துக் கொண்டு இலங்கை அரசு புலனாய்வு நடத்த வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

குற்றவாளியிடமே நீதியை வழங்குமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையம் கேட்பது ஒருபோதும் நடைமுறைக்கு வராது என்றும், சிங்கள பேரினவாத அரசின் கொலைக் குற்றத்தை மூடி மறைக்கவும், நீர்த்துப் போகச் செய்யவுமே இது வழிவகுக்கும.

இன்று ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து ஒரு தீர்மானம் விவாதத்திற்கு வரப் போகிறது. இத்தீர்மானத்தை பிரிட்டன், கனடா, ஜேர்மனி, வடக்கு மாசிடோனியா, மலாவி, மாண்டினிக்ரோ உள்ளிட்ட ஆறு நாடுகள் முன்மொழிந்துள்ளன.

இத்தீர்மானம் முழுமையானதாகவோ, இலங்கை அரசை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிப்பதற்கான வகையிலோ இல்லை. எனினும், இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு, மனித உரிமை மீறலுக்கு எதிரான ஒரு முன்னெடுப்பு ஆகும்.

47 உறுப்பு நாடுகள் இடம்பெற்றிருக்கும் ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் ஈழத் தமிழ் மக்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்த சிங்கள பேரினவாத இனக்கொலை அரசின் மீது கொண்டுவரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள எட்டுக் கோடி தமிழர்களின் இதயக் குமுறலை அலட்சியப்படுத்தி விட்டு, தமிழினத்திற்குத் துரோகம் இழைப்பவர்களை தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

இந்திய அரசு, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்தில் இன்று முன்வைக்கப்படும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என வைகோ தெரிவித்தார். (நி-4)


உ
சிவமயம்

" நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் "



# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் தொடர்பான அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் 21.03.2021 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விளக்கு வைக்கு வைபவத்துடன் ஆரம்பமாகி 28.03.2021 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

**இவ்வாண்டு Covid-19 நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு நாகதம்பிரான் அடியார்களை கேட்டுக்கொள்கின்றோம்.**

**பண்டைய மரபுகளுக்கமைவாக பண்டம் மீசாலை புத்தூர் சந்தி வரை சென்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.**

**மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களே ஒரே தடவையில் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். நேர்த்திகளை நிறைவேற்றுகின்றவர்கள் விரைவாக ஆலயத்திலிருந்து வெளியேறுவதன் மூலம் ஏனைய அடியார்களும் தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியும்.**

21.03.2021 ஆம் திகதி விளக்கு வைத்த தினம் காலை 7.00 மணியிலிருந்து தினமும் பொங்கல் உற்சவம் வரை காவடி, பாற்செம்பு, பறவைக் காவடி மற்றும் ஏனைய நேர்த்திகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விளக்கு வைத்த நாட்களின் நேர்த்திகளை நிறைவேற்றுவதன் மூலம் உற்சவ தினத்தன்று நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

**எந்தவிதமான வர்த்தக நடவடிக்கைகளுக்கும் இவ்வாண்டு அனுமதி வழங்கப்படவில்லை.**

வெளி மாவட்டங்களில் இருந்து வருகின்ற பொதுப் பேருந்து சேவைகளுக்கு எவ்வித அனுமதிகளும் வழங்கப்படவில்லை. கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மட்டும் அடியார்களின் நலன் கருதி பொது போக்குவரத்து சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**covid-19 நிலைமையினைக் கருத்தில் கொண்டு முகக் கவசம் அணிதல், கைகளை கழுவுதல் கட்டாயமானது. முகக் கவசம் இன்றி வருகின்ற அடியார்கள் ஆலயத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

இந் நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தந்து விரைவாக நேர்த்திகளை நிறைவேற்றி ஆலயச் சூழலில் இருந்து வெளியேறி ஏனையவர்களும் நேர்த்திகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அடியார்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை
கரைச்சி புளியம் பொக்கணை
நாகதம்பிரான் ஆலயம்.

(C-1780)



# சிறுவர் அரங்கம்

## யார் அழகு?



ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன.

ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும்.

ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

"நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள்கூட எங்கள் இனத்திலிருந்து தான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு.

"நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான் தான் அழகு தேவதை!" என்றது எலி.

"மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

"நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.


"என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!" குரங்கு சொல்லியது.

"ஆமாம்... ஆமாம்...!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி. "நிறமும் அழகும் மட்டும் இருந தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

(தொடரும்)

# மகாபாரதம்




காண்டவப்பிரஸ்தம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பாகப் பிரிவினை சரியாக இல்லையெனினும் பாண்டவர் இதை ஏற்றனர்.

பாண்டவர்களும் கௌரவர்களும் ஒற்றுமையாக இருக்க திருதராட்டினன் ஆசி கூறினான்.

காண்டவப்பிரஸ்தம் அடைந்தனர் பாண்டவர்கள். தேவேந்திரன் கட்டளைப்படி விசுவகர்மா என்னும் தேவசிற்பி மிகச் சிறந்த ஒரு நகரத்தை இவர்களுக்கு உருவாக்கினான். அதுவே இந்திரப்பிரஸ்தம் எனப் பட்டது.

பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் இருந்து நாட்டை நன்கு ஆட்சிபுரிந்தனர். இதனிடையே நாரதர் திரௌபதி விடயத்தில் பாண்டவர்களிடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தினார்.

பாண்டவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு ஒருவர் என்ற முறையில் திரௌபதியுடன் வாழவேண்டும். அப்படியிருக்கும் போது நால்வரின் குறுக்கீடோ இன்னலோ இருக்கக் கூடாது.

இந்த உடன்பாட்டை மீறுவோர் ஓராண்டு நாட்டை விட்டு விலக வேண்டும் என்பதே அந்த உடன்பாடு.

ஒரு சமயம் யுதிஷ்டிரரும், திரௌபதியும் ஒரு மண்டபத்தில் தனித்து இருந்த போது நள்ளிரவில் ஒரு அந்தணன் என் பசுக்களை யாரோ களவாடிவிட்டார்கள்" எனக் கூவியவாறு அம்மண்டபம் நோக்கி ஓட, அவனை தடுத்த அருச்சுனன் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு ஓடிப்போய் திருடர்களைப் பிடித்து பசுக்களை மீட்டு அந்தணனிடம் ஒப்படைத்தான்.

யுதிஷ்டிரரும் திரௌபதியும் இருந்த மண்டபத்தருகே சென்றபின் உடன்படிக்கையை மீறிவிட்டதாக அருச்சுனன் எண்ணினான்.

யுதிஷ்டிரர் தடுத்தும் ஒரு ஆண்டு நாட்டைவிட்டு விலகி இருக்க தீர்மானித்தான். புண்ணியஸ்தலங்கள் பலவற்றிற்குச் சென்றான். தென் திசை வந்து கோதாவரியிலும், காவிரியிலும் புனித நீராடினான்.

(தொடரும்)

# அவுஸ்திரேலியாவில் மோசமான வெள்ளப்பெருக்கு

- ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்
- நூற்றுக்கணக்கான வீடுகள் சேதம்
- 12 இடங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை





(கான்பெரா)


அவுஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரையில் பெய்த கனமழையால் சில பகுதிகளில் மிக மோசமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆயிரக்கணக் கானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கணக்கான வீடுகளும் சேதமாகியுள்ளன.

நியூ சவுத் வேல்ஸில் மட்டும், 12 பகுதிகளுக்கு வெள்ள அபாயமும் வெளியேற்றும் எச்ச ரிக்கைகளும் வெளியிடப்பட்டன.

8 மில்லியன் மக்களுடன் அவுஸ்திரேலியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாக இது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## கீழடி அகழ்வாராய்ச்சியில் மேலும் புதிய பொருட்கள்



(சென்னை)

தமிழகத்தில் பண்டைய தமிழ் நாகரிகத்தை பறை சாற்றும் கீழடி அகழ்வாராய்ச்சியில் புதிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக பானை, கொள்கலன்கள், முதுமக்கள் தாழியின் எச்சங்கள் கண்டறியப்பட்ட நிலையில் தற்போது மேலும் சில பொருட்களும் கண்டறியப்பட்டுள்ளன. நெல், தானியங்களை சேமிக்க பயன்படும் மண் கலன், பாசி மணிகள், சில்லுவட்டுக்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கீழடியில் விவசாயம் நடைபெற்றதும், நெல், தானியங்கள் சேமிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. (நி-4-8)

## இத்தாலியில் பூனைக்கு புதியவகை கொரோனா

(ரோம்)


இத்தாலியை சேர்ந்த பூனைக்கு பிரிட்டன் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இத்தாலியில் பூனைக்கு புதிய கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

இந்த பூனையின் எஜமானர்களுக்கு 10 நாட்களுக்கு முன் கொரோனா தொற்று இருப்பது உறுதியானது குறிப்பிடத்தக்கது.

பூனைகளிடம் இருந்து மனிதர்களுக்கு கொரோனா பரவாது என பொது மக்களுக்கு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (நி-4-8)

## கேரள வனப்பகுதிகளில் 187 வகை வண்ணத்துப்பூச்சிகள்





(சென்னை)

கேரளாவில் உள்ள செந்தூராணி வன ஜீவி இயக்கம் சார்பில் கேரள காடுகளில் வசிக்கும் பறவை இனங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வில் கேரள மாநிலத்தில் உள்ள காடுகளில் 167 வகையான பறவை இனங்கள் இருப்பதும், 187 வகையான வண்ணத்து பூச்சி இனங்கள் இருப்பதும் தெரிய வந்தது.

இதில் 6 வகையான புதிய பறவை இனங்கள் மற்றும் 3 வகையான புதிய வண்ணத்துப்பூச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (நி-4-8)

## இரண்டு நாட்களில் வடகொரிய தூதுவர் மலேசியாவைவிட்டு வெளியேற உத்தரவு


(கோலாலம்பூர்)

மலேசியாவில் உள்ள வட கொரியா தூதர்கள் மலேசியாவை விட்டு வெளியேற வேண்டும் என அந்நாட்டு அரசு உத்தர விட்டு இருப்பதால் பெரும் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.

மலேசியாவில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வந்த வட கொரியாவை சேர்ந்த முன் சோல் மியோங் என்பவர் மீது பண மோசடி வழக்கு பதிவு செய்த நிலையில் அவரை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அமெரிக்க அரசு கேட்டுக்கொண்டது.

இதனை அடுத்து மலேசிய நீதிமன்றம் அமெரிக்காவுக்கு நாடு கடத்த உத்தரவிட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த வட கொரியா, மலேசியா உடனான தூதரக உறவைத் துண்டிப்பதாக அறிவித்தது. (நி-4-8)

## இம்ரான் கானுக்கு கொரோனா



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதியாகியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. இம்ரான் கானுக்கு மார்ச் 18 ஆம் திகதி தடுப்பூசி போடப்பட்டது. தடுப்பூசி போட்டுக் கொண்ட இரண்டு தினங்களில் அவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அவர் தற்போது அவருடைய வீட்டிலேயே தன்னை தனிமைப்படுத்திக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

வடகிழக்கு ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.0 ஆக பதிவாகி உள்ளது. அத்துடன் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் மியாகி மண்டலத்திற்கு அருகே உள்ளூர் நேரப்படி மாலை 6 மணி 9 நிமிடத்துக்கு 6.9 என்கிற அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலப்பகுதியை ஒட்டி பசுபிக் பெருங்கடலின் கீழ் 73 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஜேர்மனியைச் சேர்ந்த புவியியல் ஆய்வுத்துறை முதல் தகவலாக தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் காரணமாக கடலோரப் பகுதிகளில் வழக்கத்தைவிட ஒரு மீற்றர் உயரத்துக்கு சுனாமி அலைகள் எழும்பக் கூடும் என்பதால் அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-4-8)

## மூன்றாவது அலை எச்சரிக்கை ஜேர்மனியிலும் விடுக்கப்பட்டது


(பேர்லின்)

ஜேர்மனியில் கொரோனாத் தொற்று மூன்றாவது அலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவசர கால முடக்க செயற்பாடுகள் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஜேர்மன் ஆட்சியாளர் அஞ்சலா மோர்கல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐரோப்பிய கண்டம் முழுவதும் கொரோனா தொற்று மூன்றாவதற்கான நிலைமை ஏற்படுவதற்கு அதிகரித்துள்ளதாக ஜேர்மன் சுகாதார அமைச்சு தெரிவித்தது. (நி-4-8)

## ஐஸ்லாந்தில் வெடித்தது எரிமலை



(ரேக்யூவீக்)

ஐஸ்லாந்தின் தலைநகருக்கு அருகே எரிமலை வெடித்துள்ளது.

ஐஸ்லாந்தின் ரேக்யூவீக் தீபகற்பத்தில் உள்ள ஃபேக்ரா தால்ஸ்ஃபியாட்ல் எரிமலைவாயின் பிளவு 500 முதல் 700 மீற்றர் நீளமுள்ள அந்த எரிமலை 800 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது வெடித்து சீற்ற மடைந்துள்ளது.

இது தவிர, ஐஸ்லாந்தில் கடந்த மூன்று வாரங்களில் 40 ஆயிரம் நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. (நி-4-8)

# இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை சிறந்த முறையில் எதிர்கொள்வோம்

## சரத் வீரசேகர தெரிவிப்பு

**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை சிறந்த முறையில் எதிர்கொள்வோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



30 வருட கால சிவில் யுத்தம் இலங்கையின் சுதந்திரத்திற்காகவே முன்னெடுக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் போராளிகள் குறித்து மாத்திரம் கவனம் கொள்ளும் மேற் குலகம் யுத்தத்தில் உயிரிழந்த 29 ஆயிரம் படைவீரர்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை தவிர்த்து ஏனைய மாகாணங்களில் விடுதலை புலிகளின் தாக்குதலினால் உயிரிழந்த அப்பாவி பொது மக்கள் குறித்து கவனம் கொள்ளாதது கவலைக்குரியது.

எந்த நாடுகளையும் பகைத்துக் கொள்ளாமல் ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும். தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில விடயங்களை நாட்டின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரசியலமைப்பிற்கு உட்படுத்தி உள்ளக பொறிமுறை ஊடாக செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு இன்று திங்கட்கிழமை இடம் பெறவுள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். (நி-4)

# பௌத்த புண்ணிய தலங்கள் குறித்து தவறான கருத்துகளை பரப்புவோரை கண்டறிய குழு நியமனம்



(கொழும்பு)

புத்த பெருமான், திரிபீடகம் மற்றும் பௌத்த புண்ணிய தலங்கள் தொடர்பில் பிழையான வியாக்கியானங்களை செய்து தவறான கருத்துக்களை பரப்புவோர் குறித்து கண்டறிந்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு பரிந்துரைப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது.

பௌத்த ஆலோசனை சபை நேற்று முன்தினம் 9 ஆவது தடவையாக ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற வேளையில் மூன்று நிக்காயக்களையும் சேர்ந்த மகா நாயக்க தேரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்வைத்த எழுத்து மூலமான கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த குழுவை உடனடியாக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.(நி-4)

# பாக். குடியரசு தினத்தில் பங்கேற்க இராணுவத் தளபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானின் குடியரசுத் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளுமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 81 ஆவது குடியரசுத் தின நிகழ்வுகள் நாளை 23 ஆம் திகதி இடம் பெறவுள்ளன.

இந்த நிலையில், இதற்காக இராணுவ தளபதி ஜெனரல் சவே ந்திர சில்வா பாகிஸ்தான் சென்றுள்ளதுடன் அந்நாட்டு ஜனாதிபதியை சந்தித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் குடியரசு தினத்தில் கலந்து கொள்ளும் முதல் இலங்கை இராணுவத் தளபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)




**பாபு**

### மண்ணுக்கு கீழே அடக்கமாகும் வரை



**மண்ணுக்கு மேலே அடக்கமாக இருப்போம்...!**

**அனிதா**

### இயற்கையை படைத்த திருடர்கள்...



**தண்டிக்கப்படுவதில்லை ரசிக்கப்படுகின்றனர்...!**

**கயல்**

### உலகத்திலேயே சிறந்த அலாரம் அம்மா தான்...



**7 மணிக்கு எழுப்ப சொன்னா 6 மணிக்கே 8 மணி ஆச்சு என்று சொல்லி எழுப்புவாங்க...**

**பீற்றர்**

### ஆசிரியர் : ஆன்சர் எல்லாம் ஒரே மாதிரி இருக்கு கொப்பி அடிச்சீங்கடாளா...?



**மாணவர்கள் : கேள்வி எல்லாம் ஒரே மாதிரித்தான் இருக்கு நாங்க கேட்டமா...?**

**வைஷாலி**

### படிக்கிற பையன் உனக்கு சாராயக் கடைப்பக்கம் என்ன வேலை...!




**நெப்போலியனுக்கு என்ன இங்கிலீஸ் என்று தெரிஞ்சுக்க வந்தன் சேர்...!**

**மாறன்**

### மகன்களுடான அம்மாக்களின் தொலைபேசி உரையாடல்...!



**ஏதோ சொல்ல வந்து சொல்லாமலே விட்டு விட்டதைப்போலவே முடிந்து விடுகிறது..**

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# மேலும் ஒரு இலட்சம் பேருக்கு அரச தொழில் நியமனம்

## ஜனாதிபதி அறிவிப்பு

(ஹற்றன்)

**மேலும் ஒரு இலட்சம் பேருக்கு அரச தொழில் நியமனத்தை வழங்கவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் முற்பகல் நுவரெலியா மாவட்டத்தில் இடம்பெற்ற "கிராமத்துடன் உரையாடலில்" 15வது நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 35 ஆயிரம் பேருக்கு தற்போது தொழில்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளை வழங்கும் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் மேலும் ஒரு இலட்சம் பேருக்கு தொழில்களை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதற்காக பொருத்தமானவர்களை தெரிவு செய்யும்போது சரியான ஆட்களை இனங்காண்பது கிராமிய அரச அதிகாரிகளினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பயிற்றப்பட்ட ஊழியர்கள் இல்லாதிருப்பது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமடைவதற்கு காரணமாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (நி-4)

# புர்கா தடை தொடர்பில் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை

## பல்டியடிக்கும் சரத் வீரசேகர



(கொழும்பு)


புர்கா மற்றும் மத்ரஸா பாடசாலைகளை தடை செய்வது தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவையில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

புர்காவை தடை செய்தல் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத்ரஸா பாடசாலைகளை மூடுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

எனினும் புர்காவை நிச்சயம் தடை செய்வேன் என அமைச்சர் கூறியது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் வெளி விவகார அமைச்சு அது தொடர்பில் தெரிவிக்கையில், உடனடியாக அது தொடர்பில் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இன்னும் கூட அது பேச்சுவார்த்தை மட்டத்திலேயே உள்ளதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கியது நாட்டை பாதுகாக்கவே

## சுற்றாடலை அழிக்கவல்ல என்கிறார் தேரர்



(கொழும்பு)

கோட்டாபய அரசாங்கத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் சுற்றாடல் அழிவு போல வேறு எந்தக் காலத்திலும் தான் இது போன்ற அழிவைக் காணவில்லை என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

"தற்போதைய அரசாங்கம் பாரிய அளவில் சுற்றாடலை அழிக்கிறது. மரங்கள், செடிகளை இந்தளவு அழிக்கும் யுகத்தை இது வரை நாம் காணவில்லை. இதனை மிகவும் வேதனையுடன் தெரிவிக்கிறோம். யாருடைய அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வாறு செய்கின்றனர்?

20பவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு மென்மேலும் அதிகாரம் வழங்கியது நாட்டை பாதுகாக்கவே. அவர் பொறுப்புடன் சட்டத்தை நடைமுறைப்படுத்த தலைப்பட வேண்டும். அதனால் இடம்பெறும் காடழிப்பு, சுற்றாடல் அழிப்பு, மோசடிகள் என்பவற்றை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி இது குறித்து உடனடி கவனம் செலுத்த வேண்டும்" என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பரிசுச் சீட்டு

அதிர்ச்சியிலே இரண்டு வகை உண்டு. ஒன்று இன்ப அதிர்ச்சி. இன்னொன்று துன்ப அதிர்ச்சி. இது இரண்டையும் ஏற்படுத்துவது எது என்றால் அது பரிசுச் சீட்டு–அதாவது லொட்டறிச் சீட்டு.

திடீரென்று ஒரு இலட்சம் விழுந்தால் அது இன்ப அதிர்ச்சி தானே! ஆயிரம் ரூபாய்க்குச் சீட்டு வாங்கி ... அதில் ஒரு சீட்டுக்குக்கூட பரிசு விழவில்லை என்றால் அது துன்ப அதிர்ச்சி! அதெல்லாம் இருக்கட்டும்.

இந்த லொட்டறிச் சீட்டுத் திட்டம் எப்போது எங்கே ஆரம்பமானது தெரியுமா?

பதினைந்தாம் நூற்றாண்டிலே இது ஆரம்பமாகி விட்டதாம். முதன் முறையாக. ரோமானியர்கள் தான் இதை ஆரம்பித்தார்களாம். அப்போதெல்லாம் பரிசு என்ன தெரியுமா? முதல் பரிசு ஒரு கப்பல். இரண்டாவது பரிசு ஒரு வீடு.

மூன்றாவது பரிசு வீட்டு வேலைகள் செய்வதற்கு ஒரு அடிமை ஆள்.

நான்காவது பரிசு ஆடு.. மாடு.

ஐந்தாவது பரிசு கட்டை வண்டி. இப்படியெல்லாம் தான் அப்போது பரிசுகள் கொடுத்தார்களாம். இப்போதெல்லாம் கப்பலை முதல் பரிசாகக் கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

பணம் கொடுத்து லொட்டறி டிக்கட்டுக்கள் வாங்கும் முறை இங்கிலாந்திலே தான் அறிமுகமானது... அதுவும் 1612 இலே! பரிசையும் பணமாகவே கொடுத்தார்கள்.

அதற்குப் பின்பு 1894இலே அமெரிக்காவிலே இந்தப் பழக்கம் ஆரம்பமானது. ஜேர்மனி, பிரான்ஸ் இங்கெல்லாம் கூட லொட்டறித் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

இத்தாலி அரசாங்கம் லொட்டறி மூலம் கிடைத்த வருவாயை வைத்து அரசாங்கத்தையே நடத்தியதாம்.

புகழ்பெற்ற பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தினையே இங்கிலாந்து அரசாங்கம் லொட்டறி வருவாய் மூலமாகத்தான் கட்டி முடித்ததாம்.

அமெரிக்காவிலே ஹார்வார்டு பல்கலைக்கழகம் இருக்கிறது.. கொலம்பியா பல்கலைக்கழகம் இருக்கிறது...அவற்றையெல்லாம் ஆரம்பிப்பதற்கும் இன்றுவரை சிறப்பாக இயங்கி வருவதற்கும் லொட்டறி வருவாய் தான் ரொம்பவும் உதவியாக இருக்கிறதாம்.

ரஷ்யா கூட இரண்டாவது உலகப்போர் நடந்த சமயத்திலே மட்டும் லொட்டறி நடத்தியிருக்கிறது.

சரி.. இந்தியாவுக்குள்ளே இந்தலொட்டறி சீட்டு எப்படி நுழைந்தது?

1850 இலே இங்கு ஆங்கிலேய ஆளுநராக இருந்தவர் சார்லஸ் எட்வெர்ட் டிரிவேலியன். அவர் தான் முதல் தடவையாக இந்தியாவிலே இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

சென்னையில் உள்ள ரிப்பன் மாளிகை, மூர் மார்க்கெட், மியூசியம் இதுமாதிரியான கட்டடங்களையெல்லாம் லொட்டறி வருமானத்தின் மூலமாகத்தான் கட்டி முடித்தார்களாம்.

சுதந்திர இந்தியாவிலே முதல் தடவையாக லொட்டறிச் சீட்டு அறிமுகமான மாநிலம் ஒரிசா. ஒரிசா அரசாங்கம் தான் அதை ஆரம்பித்தது. 1955 க்கு உள்ளே அதை நிறுத்தி விட்டார்கள். அதற்குப் பிறகு ஒரு பதின்மூன்று வருடத்திற்கு இந்தியாவில் லொட்டறிச் சீட்டே கிடையாது. மறுபடியும் என்ன ஆனது என்றால்...

1968இலே முதலில் கேரளாவிலே ஆரம்பமானது. அதன் பிறகு தமிழ்நாட்டிலே இது வந்தது.

இப்போதெல்லாம் இது எல்லோருக்கும் அறிமுகமான ஒரு விடயம். எங்கே பார்த்தாலும் லொட்டறி மயமாக இருக்கிறது!

ஒரு மனிதன் மிகவும் கவலையோடு உட்கார்ந்திருந்தான். கடவுள் அவன் முன் தோன்றினார். "ஏன் இப்படிக் கவலையோடு உட்கார்ந்திருக்கிறாய்.. உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் .. தருகிறேன்!" என்றார்.

"வேறு ஒன்றும் வேண்டாம் எனக்கு லொட்டறிச் சீட்டில் ஒரு லட்சம் பரிசு விழுகின்ற மாதிரி செய்யுங்கள்.. அது போதும். அதை வைத்துக் கொண்டு பிழைத்து விடுவேன்" என்றான்.

சரி அப்படியே நடக்கும் வரம் கொடுத்துவிட்டேன் என்று சொல்லி விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான்.

கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் ஒரு நாள் கடவுள் இங்கே வந்தார். அதே ஆசாமி மறுபடியும் தலையில் கையை வைத்துக் கொண்டு கவலையோடு உட்கார்ந்திருந்தான்.

கடவுளைப் பார்த்ததும் கோபமாக கத்தினான்.


என்னை இப்படி ஏமாற்றிவிட்டாயே லொட்டறியில் ஒரு லட்சம் விழும் என்று வரம் கொடுத்தியே எனக்கு விழவே இல்லையே என்றான்.

கடவுள் நிதானமாக சொன்னார்.

தப்பு என்மேல் இல்லை. உன் பேரிலே தான் ஒரு லட்சம் உனக்கு விழுவதற்கான அதிர்ஷ்டத்தை நான் கொடுத்துவிட்டேன். ஆனால் நீ.. ஒரு ரூபாய் கொடுத்து சீட்டை வாங்கவில்லை என்றார் கடவுள்.

12

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

விகிதாசார அடிப்படையிலான வேட்புமனுக்கள்

மேலே உதாரணத்தில் கணித்துக் குறிப்பிட்டவாறு நூற்றுக்கு 40 வீதமான எண்ணிக்கையைக் கணித்து அவ்வெண்ணிக்கையுடன் மேலதிகமாக 03 ஐச் சேர்த்துவரும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை கொண்ட அபேட்சகர்களின் பெயர்கள் குறித்த வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

உதாரணம்:-
A என்னும் பிரதேசசபைக்கு விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கை 10 ஆக இருந்தால், குறித்த வேட்புமனுவில் (10+3)=13 அபேட்சகர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்படவேண்டியபெண் அபேட்சகர்களின் எண்ணிக்கை எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?**

அனைத்து அரசியற் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் மேற்குறிப்பிட்ட வேட்புமனுப் படிவங்கள் இரண்டிலும் குறித்த பெண் அபேட்சகர்களின் பெயர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

வட்டாரத்திற்கு உரிய வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கையானது, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 10 வீதமாகும்.

உதாரணம்:- Aஎன்னும் பிரதேசசபைக்கு உரிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை (16 + 10) =26 ஆகும்.

இதன் பிரகாரம் போட்டியிடும் பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கை - 26 X 10/100 = 2.6 (தசமதானத்தைக் கருத்திற் கொள்ளாது) முழு எண்ணிக்கையைக் கணித்தால், அது02ஆகும்.

இதன் பிரகாரம் A என்னும் பிரதேசசபைக்கு வட்டார அடிப்படையிலானவேட்புமனுவிற்கு 02 பெண் அபேட்சகர்களின் பெயர்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

விகிதாசார அடிப்படையிலான வேட்புமனுவில் நூற்றுக்கு 50 வீதமானபெண் அபேட்சகர்களின் பெயர்கள்உள்ளடக்கப்படல்வேண்டும்.

உதாரணம்:- Aஎன்னும் பிரதேச சபைக்கு உரிய விகிதாசார அடிப்படையிலான அபேட்சகர்களின் எண்ணிக்கை 13 ஆக இருந்தால், 13 X 50/100 = 6.5 (தசமதானத்தைக் கருத்திற் கொள்ளாது) முழு எண்ணிக்கையைக் கணித்தால், அது 06ஆகும்.

இதன் பிரகாரம் A என்னும் பிரதேசசபைக்கு விகிதாசார அடிப்படையிலான வேட்புமனுவிற்கு 06 பெண் அபேட்சகர்களின் பெயர்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**வேட்புமனுப் பத்திரத்தில் இளைஞர் வேட்பாளர்களை உள்ளடக்குவது தொடர்பான தற்போதைய நிலைமை யாது?**

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நூற்றுக்கு 25 வீதமான இளைஞர் வேட்பாளர்கள் உள்ளடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இந்த எண்ணிக்கை நூற்றுக்கு 30 வீதமாக உயர்த்தப்பட்டது. எனினும் இது கட்டாயமாக்கப்படவில்லை.

**கட்டுப்பணம் எந்த அடிப்படையில் செலுத்தப்படுகிறது?**

வேட்பு மனுதாக்கலுக்கான காலப்பகுதியின் இறுதித் தினத்திற்கு முதல் நாள் 12 மணிக்கு முதல் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தங்களது கட்டுப் பணத்தை செலுத்த வேண்டும். இந்த தேர்தல் முறையில் ஒரு புதிய ஏற்பாடு அமுலுக்கு வருகிறது. அதாவது 2017 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்ட மூலத்தின் பிரகாரம் சுயேட்சைக்குழுக்கள் மட்டுமன்றி அரசியல் கட்சிகளும் தமது வேட்பாளர்களுக்காக கட்டுப் பணத்தை செலுத்த வேண்டும்.

சுயேட்சைக் குழு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒருவர் 5000 ரூபா வீதம் கட்டுப் பணம் செலுத்த வேண்டும். அரசியல் கட்சிகளின் வேட்பாளர் ஒருவருக்கு 1500 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும். இம்முறை இது கலப்பு தேர்தல் முறை என்பதனால் வட்டார முறையில் போட்டியிடுபவர்களும் பிரதேச வாரிபட்டியல் முறையில் போட்டியிடும் வேட்பாளர்களும் கட்டுப் பணத்தை செலுத்தவேண்டியது அவசியமானது.

இலங்கையில் செல்லுபடியாகும் நாணயம் ஊடாக இந்தகட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும். அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் கட்சியின் செயலாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட முகவரினால் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும். சுயேட்சைக் குழுவாயின் சுயேட்சைக்குழுவின் தலைவர் அல்லது அவரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட முகவரினால் கட்டுப் பணம் செலுத்த முடியும். கட்டுப் பணம் செலுத்திய அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் தேர்தலில் ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக்கொண்டால் அவர்களின் கட்டுப்பணம் மீள் செலுத்தப்படும். வேட்புமனு நிராகரிக்கப்பட்டாலும் கட்டுப்பணம் மீள் செலுத்தப்படும்.

மேற்கூறப்பட்டவற்றை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு கொழும்பு மாநகரசபையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

கொழும்பு மாநகரசபையில் தனி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் வட்டாரங்கள் 31 ஆக உருவாக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் அந்த 31 வட்டாரங்களுக்கும் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் சார்பில் 31 வேட்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக கொழும்பு மாநகர சபையில் 13 வட்டாரங்களுக்கு இருவர் வீதம் தெரிவுசெய்யப்பட வேண்டியுள்ளது. அதாவது இந்த 13 வட்டாரங்களிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். அதற்கும் இந்த 13 வட்டாரங்களுக்கும் இருவர் வீதம் 26 பேரை அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் வேட்பாளர்களாக களமிறக்க வேண்டும்.

அதேபோன்று கொழும்பு மாநகர சபையில் ஒரு வட்டாரத்தில் மூவர் தெரிவு செய்யப்படக்கூடிய வகையில் மூன்றுவட்டாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஒரு வட்டாரத்திற்கு மூவர் வீதம் ஒன்பது வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் நியமிக்க வேண்டும்.

அந்தவகையில் ஒரு அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவானது கொழும்பு மாநகரசபையின் வட்டாரங்களுக்கு31 + 26 + 9 என்ற வகையில் 66 வேட்பாளர்களை களமிறக்க வேண்டும். இந்த 66 பேரும் வேட்புமனுப்பட்டியலில் முதல் பகுதியில் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களினால் நியமிக்கப்பட வேண்டும். ஒன்று கூட குறைய முடியாது. இந்த 66 வேட்பாளர்களை 60 வீதமானவர்கள் என எடுத்துக் கொண்டால் மீதம் 40 வீதமே விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

உள்ளூராட்சி மன்றதேர்தல் 60 வீதம் தொகுதி முறைமையிலும் 40 வீதம் விகிதாசார முறையிலும் நடைபெறுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அது ஒரு முறைமையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும். அதாவது ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் 60 வீதமான வட்டார முறைமையில் எத்தனை பேர் தெரிவு செய்யப்படுவார்கள்? விகிதாசார முறைமையில் எத்தனை பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றம் தொடர்பாகவும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்.

அந்த சட்டத்தின் படி கொழும்பு மாநகரசபைக்கு விகிதாசார மூலமாக 44 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். எனவே இந்த 44 பேருடன் இன்னும் மூன்று பேரை கூடுதலாக சேர்த்து கொழும்பு மாநகரசபைக்கு ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக்குழு சார்பில் 47 பேர் வேட்பாளர்களாக தாக்கல் செய்யப்பட வேண்டும்.

அந்தவகையில் கொழும்பு மாநகரசபைக்கு வட்டார முறைமையில் 66 மற்றும் விகிதாசார முறைமையில் 47 பேருமாக 113 வேட்பாளர்கள் கட்சி மற்றும் சுயேட்சை குழுக்கள் சார்பில் நியமிக்கப்பட வேண்டும். அதன்படி வட்டார முறைமையில் 66 பேரும் விகிதாசார முறைமையில் 44 பேருமாக 110 பேர் கொழும்பு மாநகரசபைக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அரசியல் கட்சியொன்று கொழும்பு மாநகரசபைக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் போது ஒரு வேட்பாளருக்கு 1500 ரூபாவீதம் 113 வேட்பாளர்களுக்கு 1 இலட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாவைக் கட்டுப் பணமாக செலுத்த வேண்டும். சுயேட்சைக் குழுவைப் பொறுத்த வரையில் ஒரு வேட்பாளருக்கு 5000 ரூபாய் வீதம் 5 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் கட்டுப்பணமாக செலுத்த வேண்டும்.

**பெண் வேட்பாளர்கள்**

இதற்கிடையே புதிய சட்ட மூலத்திற்கு அமைவாக ஒருகட்சியின் சார்பில் அல்லது சுயேட்சைக் குழுவின் சார்பில் இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்த வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்டுள்ளது. அதாவது கொழும்பு மாநகர சபையை எடுத்துக் கொண்டோமானால் வட்டாரத்திற்கு உரிய வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கையானது, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 10 வீதமாகும்.

(தொடரும்)

# சீனாவின் கொரோனா தடுப்பூசி பயன்பாட்டிற்கு அனுமதி

(கொழும்பு)

சீனாவின் கொரோனா தடுப்பூசியான சினோ பார்ம் கொவிட் -19 இலங்கையில் அவசரகால பயன்பாட்டிற்காக தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.




அதன்படி, இலங்கையில் அவசரகால பயன் பாட்டிற்கு தற்போது இரண்டு தடுப்பூசிகள் உள்ளன. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி கோவிஷீல்ட் தடுப்பூசி. இது ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இந்திய தயாரிப்பு ஆகும். (நி-4)

# ஆலய வழிபாடு
## ஏன் – எதற்கு – எப்படி



## அர்த்தமுள்ள சமயச் சடங்குகள்

(தொடர்ச்சி)

வாழ்வில் ஒருவருக்கு அறிவு, ஆரோக்கியம், செல்வம், பிறப்பற்ற நிலை ஆகிய நான்கும் முக்கியம். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் ஆகிய நான்கும் அவற்றை தருகின்றன. சமயச் சடங்குகளில் குங்குமம், சந்தனம், திருநீறும் நமக்கு ஒரு உண்மையை உணர்த்தியபடி உள்ளன.

திருநீறு பூசுவது என்பது நம் வாழ்க்கை நிலையில்லாதது, சாம்பலாகி விடுவோம் என்பதைக் காட்டுகிறது. யார் ஒருவர் நெற்றியில் 3 விரல்களால் திருநீறு பூசிக்கொள்கிறார்களோ அவரிடம் இருந்து ஆணவம், கன்மம், மாயை, மூன்றும் விலகிவிடும் என்பது ஐதீகம். குங்குமம் என்பது சக்தியின் அடையாளம். பராசக்தி துணையில்லாமல் இந்த உலகில் நாம் எதுவும் செய்ய முடியாது. இதனால் தான் பூஜைகளில் குங்குமம் தவறாமல் இடம்பெறுகிறது. தினமும் நெற்றியில் குங்குமம் வைத்துக் கொள்பவர்கள் அம்பிகையின் திருவருளும் சிறப்பை எளிதில் பெறுபவர்கள் என்பதை குறிக்கிறது. சந்தனம் குளிர்ச்சியை தருவது. இறைவழிபாடு செய்பவர்கள் நிச்சயம் மனம் குளிர்வார்கள் என்பதை சந்தனம் காட்டுகிறது.

இறைவனுக்கு செய்யப்படும் அபிஷேகம், நாட்டில் நில வளமும் நீர் வளமும் பெருகும் என்பதை காட்டுகிறது. இறைமூர்த்தங்களை அலங்காரம் செய்வது என்பது அவன் படைக்கின்ற பொருட்களை காத்து நிலை பெறச் செய்ய வேண்டும் என்பதை காட்டுகிறது.

அதுபோல இறைவழிபாட்டின் போது நாம் செய்யும் ஹோமங்கள் எல்லாப் பொருட்களையும் இறைவனே அளிக்கிறான் என்பதைக் காட்டுகிறது. தீபாராதனை காட்டுவது அறிவு செல்வத்தை உணர்த்துகிறது.

ஆனால் சூடம் ஏற்றி தீபாராதனை செய்வதற்கு வேறொரு தத்துவம் உள்ளது. அதாவது சூடம் கடைசி வரை எரிந்து காற்றோடு கலந்துவிடும். அது போல ஆன்மா கடைசியில் இறைவனுடன் கலந்து விடும் என்பதை சூடம் தீபாராதனை காட்டுகிறது. ஆலயத்தில் மாவிலை தோரணம் காட்டுவதில் ஒரு தத்துவம் உள்ளது. மாவிலை ஒரு போதும் அழுகாது. காய்ந்து சருகாகி உலர்ந்து மண்ணோடு மண்ணாகச் சேர்ந்து விடும். அதுபோல நம் உடலும் இடையில் கெட்டுப் போகாமல் நீண்டகாலம் காய்ந்து சருகாகி உலர வேண்டும் என்பதை மாவிலை தோரணம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது.

ஆலயங்களுக்குச் செல்லும் போது தவறாமல் விளக்கு ஏற்ற வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் வலியுறுத்திச் சென்றுள்ளனர். அந்த விளக்கு நீண்ட நேரம் எரிந்தால் இறைவன் நமக்கு அருளுகிறார் என்பார்கள். விளக்குத் தீபம் எப்போதும் மேல் நோக்கியே எரியும். எனவே விளக்கு ஏற்றினால் கர்வம் மறைந்து, நம் அறிவானது மேல் நோக்கி உயர்ந்து பிரகாசிக்கும் என்பதை தீபம் காட்டுகிறது. ஆலயத்தில் நமக்கு தரும் தீர்த்தத்திலும் ஒரு தத்துவம் உள்ளது. துளசி மகாலட்சுமி குடியிருக்கும் இடமாகும். அதை உட்கொள்ளும் போது பக்தன் மங்கலம் பெறுகின்றான். அறிவியல் ரீதியாகவும் துளசியில் எத்தனையோ மருத்துவக் குணங்கள் இருப்பது தெரிந்தது தான்.

அதுபோல ஆலயத்தில் நாம் தியானம் செய்து ஓம் மந்திரத்தை உச்சரித்தால் அந்த மந்திர அதிர்வலை உடலுக்கு புத்துணர்ச்சி தருவதை அனுபவபூர்வமாக உணரலாம். இறைவழிபாட்டின் ஒரு அங்கமாக நாம் விரதம் இருப்பதிலும் ஆன்மிக ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் பல இரகசியங்கள் புதைந்துள்ளன. விரதம் மன உறுதியை வளர்த்து இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்வதைக் காட்டுகின்றது. அதுபோல கடவுள் எடுத்த அவதாரங்களிலும் தத்துவங்கள் அடங்கியுள்ளது. உதாரணத்திற்கு நரசிம்ம அவதாரத்தை எடுத்துக் கொண்டால் “எல்லாப் பொருட்களுக்குள்ளேயும் நான் இருக்கிறேன்” என்ற தத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

ஆலயத்திற்குள் நுழைந்ததும் விநாயகர் முன்பு நின்று கொண்டு, தலையில் குட்டி, தோப்புக்கரணம் போடுவதில் தொடங்கி கடைசியில் சிறிது நேரம் உட்கார்ந்து இருந்துவிட்டு வருவது வரை அனைத்திலும் தத்துவங்கள் உள்ளன. அந்த தத்துவங்களை புரிந்து கொண்டு இறைவழிபாடு செய்தால் மனம் பக்குவத்திற்கு வரும்.

“இறைவனே...நீயே கதி” என்று சரணடைந்து விடுவோம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## கட்சியிலிருந்து நீக்கப்பட்டார் அரவிந்தகுமார்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் நீக்கப்பட்டுள்ளார்.

ஹற்றனில் உள்ள கட்சியின் பிரதான காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

கட்சியின் கொள்கையை மீறி 20 வது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித் தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். (நி-4-8)

## நாட்டை வந்தடைந்தார் பிரதமர்

(கொழும்பு)

பங்களாதேஷ்க்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சனிக்கிழமை நாட்டை வந்தடைந்தார். பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனாவின் அழைப்பினை ஏற்று கடந்த 19 ஆம் திகதி இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை பங்களாதேஷ்க்கு பிரதமர் மேற்கொண்டிருந்தார்.

பங்களாதேஷின் சுதந்திரதினம் மற்றும் பங்கபந்து செய்க் முஜ்பர் ரஹ்மானின் 100 ஆவது பிறந்த தினம் ஆகிய நிகழ்வில் பிரதமர் பங்கேற்றார். இதேவேளை பிரதமரின் குறித்த விஜயத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் முதலீட்டு நடவடிக்கைகள், தொழில்நுட்ப முன்னேற்றம், விவசாயம் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் கொரோனா தொற்று நெருக்கடிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை மற்றும் பங்களாதேஷிற்கு இடையில் ஆறு ஒப்பந்தங்கள் இரு நாட்டுப் பிரதமர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வுகளை தொடர்ந்து, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 150 |
| தக்காளி | 80 | 120 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 160 | 200 | 180 | 200 |
| பூசணி | 70 | 70 | 80 | 80 |
| புடோல் | 120 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 260 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 180 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 160 | 200 | 200 | 240 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 800 |
| போஞ்சி | 140 | 160 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 140 | 120 |
| கீரை – 1 பிடி | 40 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-50 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 160 | 120 | 160 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 500 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | 10 | 100 | 100 |

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை நிலையத் தலைவர் ஸ்ரீகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆண்டு விழாவினை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை இரத்ததான முகாம், இலவச மருத்துவ முகாம் ஆகியனவும் பிற்பகல் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் கலந்து கொள்வார். (5-4-30)

# அபிவிருத்தி என்பது மக்களுக்கானது அரசியலுக்கானதாக இருக்கக்கூடாது



(சாவகச்சேரி)

**அபிவிருத்தி என்பது மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர, ஒருபோதும் அரசியலுக்கானதாக இருக்கக் கூடாது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை தென்மராட்சியில் வீதிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமப்புற மக்களின் வேதனைகளை உணர்ந்து அந்த மக்களுக்காக வீதி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சிபாரிசு செய்து வருகிறோம்.

நான்கு வருடங்களில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் காப்பெற் வீதிகளை நாட்டில் அமைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

இந்த வேலைத்திட்டம் எங்கள் பிரதேசத்திற்கு மிகவும் அவசியமான தொன்று. யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்கள் கடந்தும் இன்றும் எமது பகுதியில் பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றன.


வறுமை பிரதேசம் என்ற அடையாளத்தில் இருந்து நாம் நீங்கி நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பீட்டு ரீதியாக வளர வேண்டும்.

கிராமப் புறங்களில் இவ்வாறான காப்பெற் வீதிகள் அமையும் போது அந்தக் கிராமத்தின் பெறுமதி உயரும். அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

அபிவிருத்தி என்பது மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர அரசியலுக்கானதாக இருக்கக் கூடாது.

அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மூலம் மக்கள் வெற்றியடைந்தால் எனது இலக்கு ஈடேறும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவிற்கு வெளிமாவட்டத்தினருக்குத் தடைவிதிப்பு



(கண்டாவளை)

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் நேற்று ஞாயிற்றுக்கிழமை விளக்கு வைத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு பங்குனி உத்தரப் பொங்கல் விழா வரை நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் பாரம்பரிய முறைப்படி நேற்று விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விளக்கு வைக்கப்பட்டு பண்டைய மரபுகளுக்கு அமைவாக மீசாலை புத்தூர் சந்தியில் இருந்து பண்டம் எடுத்து வருவதற்காக மாட்டு வண்டிகளில் அடியார்கள் ஆலயத்தில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

நேற்று புறப்பட்ட இவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி இரவு ஆலயத்தை வந்தடைந்தவுடன் பொங்கல் விழா நடைபெறும்.

இவ்வாண்டு கொரோனா தொற்றினை கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அடியார்கள் அனுமதிக்கப்படுவதுடன் நேர்த்திகளை நிறைவேற்றுவோர்கள் விரைவாக ஆலயத்தில் இருந்து வெளியேறி நேர்த்திக்கடன்களை செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் காலத்தில் ஆலயச் சூழலில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற பொதுப் பேருந்து சேவைகளுக்கோ எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு அமைவாக பொங்கல் விழா நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# வீதியோர கழிவுகளால் மக்கள் அசௌகரியம்

## அகற்றுமாறு கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா வைரவப் புளியங்குளம் குளப்பகுதிக்கு அருகே வீதியோரத்தில் வீசப்படும் கழிவுகளால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வைரவப்புளியங்குளம் குளத்தின் நீர்பாயும் கால்வாய் மற்றும் வீதியோரங்களில் கழிவுகள் வீசப்பட்டு வருகின்றன.

கழிவுகள் அப்பகுதியில் வீசப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் அவ் வீதியால் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

அங்கு வீசப்படும் கழிவுகள் ஓடும் நீரினாலும், நாய் மற்றும் காகம் போன்றவற்றினாலும் காவிச் செல்லப்படுவதனால் அயல் வீடுகளில் வசிப்பவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

சூழல் மற்றும் நீர் என்பன கழிவுகளால் மாசடைந்து வருவதுடன் தொற்று நோய் பரவக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(5-4-250)



அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இயற்கை விவசாயி ம.கிரிசனின் அல்லை விவசாயி ஆரோக்கிய உணவு விற்பனை நிலையத்தை அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் யாழ். மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் இணைந்து குறித்த விற்பனை நிலையத்தை திறந்து வைத்தனர். (படம் :- ரவிசாந்)

# ஆகாரமே ஆதாரம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவ கலாநிதி தியாகராசா சுதர்மனின் "ஆகாரமே ஆதாரம்" (உணவில் சித்த மருத்துவமும் நவீன அறிவியலும் அறிமுகம்) நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு டாக்டர் அ.அரவிந்தன் தலைமையில் நடைபெறும். (5-4-8)



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணி நிறைவுபெற்ற பொலிகண்டி ஆலடிப் பகுதியில் நாட்டப்பட்ட நினைவுக்கல்லினை பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் பார்வையிட்டதுடன் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

(படம் :- மகாலிங்கம்)

பிறர் தவறுகளைக் கண்டு, தன் தவறுகளைத் திருத்திக் கொள்கிறவன் தான் அறிவாளி.

– ப்ளூடார்த்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைக்கு வருகைதந்த தேவலோகத் தூதுக்குழு - 4

**பிரம்மா:** சித்திரகுப்தா! இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளை வாசித்தேன். ஒரு பத்திரிகையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளைப் படியான அறிவித்தல் வெளிவந்திருந்தது. அதில் தங்களைக் கட்சியில் இருந்து நீக்கியது தவறு என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸுக்கு எதிராக இருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அதன் தாற்பரியம் யாதோ!

**சித்திர:** சுவாமி அது கொஞ்சக் காலமாக நடக்கிறது. அவர்கள் கட்சியில் இருந்து நீக்குவார்கள். இவர்கள் வழக்குத் தொடுப்பார்கள். இப்படியே கட்சிக் கடமை போகிறது.

**பிரம்மா:** இம்... எல்லோரையும் ஒன்றுசேர்ப்பார்கள் என்று பார்த்தால்... பரவாயில்லை ஏதோ நடக்கட்டும்.

**நாரதர்:** அது சரி சித்திரகுப்தா மானிப்பாய் வீதி இன்னமும் திருத்தப்படவில்லையா?

**சித்திர:** இல்லை சுவாமி. அந்த வீதிக்கு இன்னமும் காபற் போடுகின்ற விதி வரவில்லை.

**விஷ்ணு:** மானிப்பாயில் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் இல்லையோ.

**நாரதர்:** காபற் வீதி போட்டென்ன. போடாமல் விட்டென்ன.

**இந்திரன்:** நாரதருக்கு காபற் வீதியில் ஏன் இந்த வெறுப்பு.

**நாரதர்:** இந்திரா! நாங்கள் மன்னாருக்குப் போகும்போது கேரதீவு–சங்குப்பிட்டி வீதியைப் பார்த்தேன். மிக அண்மையில் போடப்பட்ட அந்தக் காபற் வீதி உடைந்தும் சரிந்தும் பிய்ந்தும் கிடக்கிறது. இப்படியொரு கேவலம் கெட்ட காபற் வீதியை பூநகரியில் அமைத்திருக்கிறார்கள்.

இதுபற்றியெல்லாம் வடக்கு மாகாண நிர்வாகம் கண்காணிப்பதில்லையா!

**யமன்:** சித்திரகுப்தா! கேரதீவு – சங்குப்பிட்டி காபற் வீதியைப் போட்ட நிறுவனத்தின் விபரங்களை உடனடியாகத் திரட்டு.

வீதி அபிவிருத்தி அதிகார சபை என்ன செய்கிறது? கேரதீவு–சங்குப்பிட்டி காபற் வீதி அமைத்தபோது வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்பார்வை செய்யவில்லையா?

*(யமன் கடும் கோபத்தோடு கேட்டான்)*

**பிரம்மா:** யமதர்மா! எங்களிடமும் பிழை இருக்கிறது.

**யமன்:** என்ன பிழை சுவாமி!

**பிரம்மா:** கெட்டவர்களுக்கும் கடமையை நேர்மையாகச் செய்யாதவர்களுக்கும் நல்ல விதி எழுதி விட்டு நேர்மையானவர்களதும் பண்பானவர்களதும் தலையில் பாழ்பட்ட விதியை பதித்து விடுகின்றோம். என்ன செய்வது எல்லாம் விதி தான்.

*பிரம்மா மனம் நொந்து கொண்டார். பிரம்மாவின் மனக்கலக்கத்தால் தேவலோகத் தூதுக் குழு அமைதியாயிற்று. அந்நேரம் இந்திரன் சித்திரகுப்தா! புஷ்பக விமானம் தென்பகுதிக்கு செல்லட்டும் என உத்தரவிட்டார். ஆகட்டும் சுவாமி என்று கூறியபடி சித்திரகுப்தன் புஷ்பக விமானத்தை தென்பகுதி நோக்கிச் செலுத்தினார்.*

**யமன்:** *(இந்திரனைப் பார்த்து)* சுவாமி தென்பகுதியில் சரத் வீரசேகர என்ற பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அவரின் போக்கும் கதையும் தமிழ் மக்களுக்கு அவ்வளவு நல்லதாக இல்லை.

**இந்திரன்:** யமதர்மா! நீ சரியாக இருந்தால் சரத் வீரசேகர இப்படிக் கதைக்க முடியுமா என்ன? பாதுகாப்புப் படையில் அவர் இருந்தபோது நீ உன் கைங்கரியத்தை செய்திருந்தால்...

*(இந்திரன் உரத்தகுரலில் கூற, யமன் தலைகுனிந்தார்)*

*(நாளை தொடரும்)*

# நல்லைக்குருமணியின் 40-வது குருபூசைத் தினம் இன்று

கதாப்பிரசங்கம் செய்தே தமிழ் வளர்த்த புண்ணிய சீலர் நல்லைக் குருமணியின் 40 ஆவது குருபூசைத் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை 1966 இல் ஆரம்பித்த இவர் யாழ். குடா நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் சென்று கதாப் பிரசங்கம் செய்த பெருமையையுடையவர்.

சைவம் வளர வேண்டும் என்று முற்று முழுதாய்ப் பாடுபட்ட இவர் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலான இடங்களுக்குச் சென்று கதாப் பிரசங்கம் செய்து தமிழ் வளர்த்த பெருமை இவரையே சாரும்.

கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், இராமாயணம், மகாபாரதம் முதலானவற்றை கதாப்பிரசங்கம் செய்த இவரை எல்லோரும் "மணிபாகவதர்" என்று செல்லமாக அழைப்பர்.

இவருடைய குருபூசை நன்னாளாகிய இன்றையதினம் ஆதீனக்குருமூர்த்த ஆலயத்தில் விசேட அபிஷேகங்கள், பூசை வழிபாடுகள், ஆராதனைகள் இடம்பெறவுள் என. இதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நல்லை திருஞான சம் பந்தர் ஆதீனத்தின் அளப்பரிய சமூக, சமயப் பணிகள் கணக்கிலடங்காதவை. பண்ணிசை வகுப்புக்கள், பாலர் வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள், பண்டித வகுப்புக்கள் சைவப்புலவர் வகுப்புக்கள் என்று இன்னோரன்ன பல பயன்தரு வகுப்புக்கள் இங்கே நடைபெறுவதால் மாணவ உலகம் பல்வேறு நன்மைகளைப் பெற்று வருகின்றது எனில் மிகையாகாது.

ஈழத்திலிருந்து இந்தியா சென்று மதுரையிலுள்ள சைவ ஆதீன சுவாமிகளிடம் காஷாயம் பெற்று துறவு பூண்டு தம்பிரான் சுவாமிகள் என்ற திருநாமத்துடன் இலங்கைக்கு வந்து இங்கே நல்லூரிலே ஆதீனம் அமைத்த பெருமை அவரையே சாரும்.

இன்று 40 ஆவது குருபூசையைக் கொண்டாடும் ஆதீனம் ஈழத்திலேயே மிகச்சிறந்த ஓர் ஆதீனமாகும். இதனுடைய அளப்பரிய சேவைக்கு ஆதரவளிப்பது சைவமக்களின் தலையாய கடனாகும்.

**கலாபூஷணம்**
**இராசையா**
**ஸ்ரீதரன்**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** விசுவமடுவிலும்,

**வவுனியா பிர தேசத்தில்** தரணிகுளம், சமணன்குளம் கிராமம், கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, சமயபுரம் கிராமம், சின்னதம்பனை, வீரபுரம், கெலசியம் பலாவ, பெரிய நொச்சிக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** பூவர சங்குளம் கிராமம், ஒல்லிமோட்டை, சிலாவத்துறையிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற் படை முகாம், முள்ளிக் குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனநிறைவு மனிதனுக்கு மகிழ்ச்சிச் சுரங்கம்



மனநிறைவு மனித வாழ்வின் வெற்றிக்கெல்லாம் சிகரமானது. அதை உணர்ந்து கொள்வது, பயிற்சி செய்வது, பயனடைவது இவை எளிது. முயற்சியே தேவை.

1. உனக்கு என்ன வேண்டும் என்று உன்னையே நீ வினவிக் கொள். மனநிறைவும், மகிழ்ச்சியும் தான் தேவை என்பது விளங்கி விடும். இதுவே மனிதப் பிறவியின் பெருநோக்கம்.

2. நீ எங்கு, எப்படி, எவ்விடத்தில் இருக்கிறாய் என்று கணித்துக் கொள்ள வேண்டும். அதாவது வயதிலே, வாழ்விலே, கல்வியிலே, செயல் திறமையிலே, அறிவின் நுட்பத்திலே, பொருள் வளத்திலே, அதிகாரத்திலே, எந்த நிலையிலே நீ இருக்கிறாய் என்று கணித்துக் கொள். இவற்றைக் கொண்டு, உனக்கு, குடும்பத்துக்கு, சுற்றத்தாருக்கு, ஊருக்கு, உலகுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று கணித்துக் கொள். முடிந்த அளவிலே செய்து கொண்டிரு. இந்தத் தொண்டினை ஆற்றுவதற்கு என் திறமையை எந்தெந்த முறையில் வளர்த்துக் கொள்ள முடியுமென்று திட்டமிட்டு முறையான பயிற்சியின் மூலம் வளர்த்துக்கொள். இங்கே ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கி விடும்.

3. பிறரிடமிருந்தும் அல்லது எவரிடமிருந்தும் எதையும் எதிர்பாராதே. எதிர்பார்த்தல் பெரும்பாலும் ஏமாற்றத்தில் தான் முடிகின்றது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்துவிடும்.

4. ஒவ்வொருவருக்கும் அறிவு இருக்கிறது. பொறுப்புணர்ச்சி இருக்கிறது. செயல் திறமை இருக்கிறது. வாழ்வின் அனுபவம் இருக்கிறது. இதை ஒத்துக் கொள். பிறரை மேய்ப்பதோ, அடக்கி ஆள்வதோ இன்ப ஊற்றைக் கெடுத்துவிடும். நலம் செய்வதோடு விட்டு விடு. அதற்குப் பதில் எதிர்பார்ப்பதை மறந்துவிடு.

5. அவசியமின்றிப் பிறர் செயலில் தலையிடாதே. புதிய சிக்கல்களை உருவாக்கிக் கொள்ளாதே. உனது கடமைகளிலிருந்து தக்க நீதி உணர்வின்றி நழுவாதே. உன் மீது பிறருக்கு மதிப்பும் உன் உள்ளத்தில் அமைதியும் பெருகும்.


# உலக நீர் தினம் இன்று



திருமதி ஷா.தாரகா
பொறுப்பதிகாரி (யாழ்ப்பாணம்)
தேசிய நீர் வழங்கல்
வடிகாலமைப்புச்சபை

நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி உலகத்தின் கவனத்தை திருப்பும் வண்ணம் ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாகக் கொண்டாடுகின்றது. இத் தினம் முதல் முதலில் 1993 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளிலே முக்கிய இடம் வகிப்பது நீர். உலகிலுள்ள எல்லா உயிரினங்களின் வாழ்க்கைக்கும் நீர் இன்றியமையாதது. உயிரினங்களின் உற்பத்தியே நீரிலிருந்து தான் ஆரம்பிக்கின்றது என விஞ்ஞான ஆராய்ச்சிகள் சான்று பகிர்கின்றன. குடிபானமாகவும், சுத்தப்படுத்தும் காரணியாகவும் உதவும் நீரை நாம் அசுத்தப்படுத்தாமலும், வீண்விரயம் செய்யாமலும் பயன்படுத்துவது எமது அனைவரினதும் தலையாய கடமையாகும்.



சுத்தமான குடிநீர் யாவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இந்த இலக்கை அடைவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்நாட்டு, வெளிநாட்டு பண உதவிகள் மூலம் நன்கு திட்டமிட்டு பல பாரிய செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கும், வர்த்தக நிலையங்கள் தொழிற்சாலை அபிவிருத்திக்கும் தடையற்ற குழாய்நீர் விநியோகம் இன்றியமையாததாகும். இன்று இலங்கையில் ஒருசாரார் குழாய் நீர் மூலம் இன்னும் சிலர் குழாய் கிணறுகள் மூலம் ஏனையோர் ஆறு, குளம், கிணறு வேறு நீர் நிலைகள் மூலம் நீரைப் பெறுகின்றனர். இவை அனைத்தும் மக்களின் சுகவாழ்க்கைக்குத் தேவையான சுத்தமான நீரா என்பது கேள்விக்குறியாகும்.

தற்போது இலங்கையில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் சுத்தமான குடிநீர், இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள முக்கியமான ஆறுகள், நீர்த்தேக்கங்கள் மூலம் பெறப்பட்டு தேவையான இரசாயனப் பொருட்கள் இடப்பட்டு கிருமிகள் அழிக்கப்பட்ட பின் நீர் வழங்கல் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. நீர் இலவசமாகப் பெறப்பட்டாலும் சுத்திகரித்தல், குழாய்கள் மூலம் விநியோகித்தல், பராமரிப்பு போன்ற பணிகளுக்கு அதிக தொகை செலவிடப்படுகின்றது. நீர் விற்பனை மூலம் பெறப்படும் வருமானம் அதன் சுத்திகரிப்புக்கும் பராமரிப்பு வேலைகளுக்கும் போதுமானதாக இருந்தாலும் புதிய செயற்றிட்டங்களை ஆரம்பிக்க இது போதுமானதல்ல. எனவே தான் வெளிநாட்டு உதவி நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் சர்வதேச கூட்டு முகவர் நிலையம், ஜேர்மன் தொழில்நுட்ப உதவி நிறுவனம் போன்ற பல வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் புதிய செயற்றிட்டங்களை ஆரம்பிக்க தொழில்நுட்ப மற்றும் பண உதவிகளையும், நீண்ட கால கடன்களையும் அளித்து வருகின்றன.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கின்றது. பல ஆசிய நாடுகளில் தனியார் முதலீட்டு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் தனியார் முதலீடுகள் சாத்தியமாகுமா? என்ற ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் தனியார் முதலீடுகள் மூலம் பல செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்படுகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையின் படி 2025 ஆம் ஆண்டில் சீனாவின் குடித்தொகை 1.5 பில்லியன் எனவும் இந்தியாவின் குடித்தொகை 1.4 பில்லியன் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அதிகூடிய சனத்தொகையுள்ள இவ்விரு நாடுகளிலும் சுத்தமான நீரின் அளவு தற்போதுள்ள ஆண்டுக்கான தலா 2200 கனமீற்றரிலிருந்து 1600 கனமீற்றர் அளவுக்கு குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் உலக சனத்தொகையானது அதன் ஆகக்குறைந்த நீர் தேவைப்பாடுகளை நிறை வேற்றிக் கொளவதற்குக் கூட சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியேற்படும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

குடித்தொகை அதிகரிப்புக்கு இணையாக நீர்வள மூலங்களில் அதிகரிப்பொன்று ஏற்படாமையால், நீர் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதென்பது இன்று மிக முக்கிய ஒரு தேவையாக மாறியுள்ளது. ஏராளமான பொருட் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்படும் குடி நீரை அபரிமிதமான பணிகளுக்காக உபயோகிக்காமை - வீண்விரயம் செய்யாமை ஆகியவற்றின் மூலமே பொது மக்கள் தமது ஒத்துழைப்பை நல்க முடியும்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நீர் வளத்தைக் கையாளுவது தொடர்பில் எமக்கு கீர்த்திமிகு வரலாறு ஒன்று உண்டு. நீர் வழிகளைத் திசை திருப்பி தேவையான இடங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதில் எமது மூதாதையரிடம் குடிகொண்டிருந்த பேராற்றலைக்கண்டு உலகமே அன்று வியப்பில் ஆழ்ந்தது. எனினும் இன்று எமக்கு நீர்ப்பாசனத்துறை சார்ந்த கட்டுமானங்களுக்கும் அவற்றின் பராமரிப்புக்கும் வெளிநாட்டு நிதி உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய கவலைக்கிடமான சூழ்நிலை தோன்றியுள்ளமை மனங்கொள்ளத்தக்க ஒரு விடயமாகும். நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படும் மொத்த நீரின் 62 வீதமானவையும் கொழும்பு பெரும்பாலாக நீரவழங்கல் திட்டத்தின் கீழுள்ள அம் பத்தலே, வடிகம, கலடுவாவ ஆகிய நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றது. இது தவிர வடமத்தி, வடமேல் மத்தி, சப்ரகமுவ, மேல், தென், ஊவா ஆகிய மாகாணங்களிலும் வடக்கு, கிழக்கு பிராந்திய சேவை வழங்கல் நிலையங்கள் மூலமும் நீர் உற்பத்தி செய்யப்படுகின்றது.

எதிர்வரும் இரண்டு தசாப்த காலமளவில் நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரதான சவால் யாதெனில் மென்மேலும் நகரமாயக்கல் இடம்பெற்றுவரும் நாடொன்றில், பேண்தகு அபிவிருத்தி சார்ந்த சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் இலக்குகளை வெற்றி கொள்ளும் விதத்தில் மனிதக் குடியேற்ற அபிவிருத்தியை முகாமை செய்வது எவ்வாறு என்பதாகும். இச்சவாலுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கையில் மிகவும் முனனேற்றகரமாகவும் செயற்றிறன் மிக்கதாகவும் நீர் வளத்தை முகாமைசெய்வதும் சூழலுக்கு இதமானவாறு நீர்வளத்தைக் கையாளுவதும் மிகவும் பிரதானமானதாகும். மனிதக் குடியேற்றம் சார் அபிவிருத்திப் பிரயத்தனத்தை பொருளுள்ளதாகப் பரிணமிக்கச் செய்யும் பொருட்டு, நீர்வள மூலங்கள் மற்றும் மக்களின் நீர் சார்ந்த தேவைப்பாடுகள் பற்றிய தகவல் பரம்புரையை விரிவானவளவில் மேற்கொள்ளுதல் வேண்டும். நீர் வளத்துடன் தொடர்பான விடயங்கள் குறித்து அவர்களை விழிப்புறச் செய்வதன் வாயிலாக மாத்திரமே, சகலருக்கும் துரிதமாகவும் போதியளவிலானதுமான நீர் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கான ஆற்றல் வாய்க்கப் பெறும். நீர்வளம் தொடர்பான எமது அறிவை விருத்தி செய்து கொள்ளவும் அவ்வறிவைப் பகிர்ந்து கொள்ளவும் உலக நீர் தினத்தை நல்லதொரு சந்தர்ப்பமாக்கிக் கொள்வோமாக.

---

## அல்கொய்தா மற்றும் தலிபான்களுடன் தொடர்புடைய குழு இலங்கையில்?

(கொழும்பு)

அல்கொய்தா மற்றும் தலிபான் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்பு வைத்திருக்கும் இலங்கையின் மற்றுமொரு அமைப்பு பற்றிய விசாரணைகளை புலனாய்வுத்துறை ஆரம்பித்துள்ளது.

இஸ்லாமிக் ரிலிஜ் ஏஜன்ஸி எனப்படும் இந்த அமைப்பு, கிழக்கு மாகாணத்தை தளமாகக் கொண்டு தற்போதும் இயங்கிவருவதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

புலனாய்வுப்பிரிவு நடத்திய விசாரணையில், கட்டார், சவுதி உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளின் பல்வேறு அமைப்புக்களிடம் இருந்து சுமார் 24 கோடி ரூபா நிதி குறித்த அமைப்பிற்கு கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியாகிய சிங்கள ஊடகம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. (நி-4)

## 80 இலட்சம் ரூபாய் பணத்துடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பெல்மதுளை பகுதியில் 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்துடன் 44 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக முச்சக்கர வண்டியில் அவர் பயணித்த போதே முச்சக்கர வண்டி தடுத்து நிறுத்தப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

## பதுளை- பசறை பேருந்து விபத்து டிப்பர் சாரதி கைது

(பதுளை)

பதுளை-பசறை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 7.15 மணியளவில், லுணுகலயில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து எதிர்த்திசையில் இருந்து வந்த டிப்பர் வண்டிக்கு இடமளிக்க முயன்றபோதே வீதியில் இருந்து விலகி 200 அடி பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்து உள்ளாகியது. இதன்போது, எதிர்த்திசையில் இருந்து வந்த டிப்பர் வண்டி சாரதி அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

குறித்த சாரதி, தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## வீட்டுக்குள்...

கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இரண்டு மோட்டார்ச் சைக்கிள்களில் கறுப்புத் துணிகளால் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டு ஹெல்மெட் அணிந்து ஆறு பேர் கொண்ட குழுவினர் வீட்டின் முன்பக்க யன்னல் கதவுகளை வாள்களால் அடித்து உடைத்ததுடன் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார்ச் சைக்கிள்களையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

வீட்டில் உள்ளவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாதவாறு தாம் கொண்டு வந்த பெற்றோலை வீட்டில் இருந்தவர்களுக்கு முகத்தில் வீசிவிட்டு வீட்டின் முன்பக்கத்தில் தீ மூட்டிய குறித்த குழுவினர் வீட்டின் முன் கேற்றையும் வாள்களால் சேதப்படுத்திவிட்டு அங்கி ருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா-18)

## இலங்கை மீதான...

பப்படுத்தப்பட்டாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள், இந்தியாவுடன் இணைந்து இலங்கையின் கேந்திர ஸ்தானத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி பூகோள ரீதியான சீன எதிர்ப்பினை முன்னெடுப்பதே இலக்காகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேநேரம், இலங்கை அரசாங்கம் பிரேரணையை நிராகரிப்பதாக தொடர்ச்சியாக கூறிவருகின்றது.

உண்மையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அப்பிரேரணை பெயரிட்டு அறிவிக்கப்பட்டதும் இலங்கையின் சார்பில் உறுப்புரிமை கொண்ட நாடொன்று வாக்கெடுப்பினைக் கோர வேண்டும்.

அவ்வாறு கோராது நிராகரிப்பதாக புச்சாண்டி காண்பித்துக் கொண்டிருப்பதால் எவ்விதமான பயனுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ஞா)

## தமிழர்களுக்கு...

இதுகுறித்து திமுக தலைவர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து, ஐ.நா. மனித உரிமை பேரவையில் ஆறு நாடுகளின் சார்பில் கொண்டு வரப்படும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என அந்நாட்டின் வெளியுறவுச் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே அளித்துள்ள பேட்டியும் - அந்தப் பேட்டியின் மீது இதுவரை எந்தக் கருத்தும் சொல்லாமல் அமைதி காக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் மௌனமும் உலகத் தமிழர்கள் இடையேயும், தமிழகத்திலும் பேரதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இருக்கிறது என்றுள்ளது. (ஞா)

## மேலும் ஒருவர்...

கம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 545 ஆக அதிகரித்துள்ளது.(ஞா)

## விசாரணைக்கு...

சார்ஜன்ட் மீது சகோதரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திருநகரில் இடம்பெற்றுள்ளது.

அதனையடுத்து திருநகருக்கு பெருமளவு பொலிஸார் அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரும் நாவற்குழி பகுதிக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சகோதரர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர். ஒருவருக்கு கஞ்சா போதைப்பொருள் விற்பனை தொடர்பில் 3 வழக்குகள் நீதிமன்றில் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் கூறினர்.

திருநகரில் நேற்றுமுன்தினம் இரவு குடும்ப உறவினர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் துவிச்சக்கர வண்டி ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 119 அவசர பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுக்கச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஞா-33)

## யாழில் நேற்றும்...

டுள்ளனர்.

வடக்கில் 290 பேரின் பிசிஆர் மாதிரிகள் நேற்று பரிசோதனை செய்யப்பட்டன. இதில் யாழ்.மாவட்டத்தில் 13 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இதில் இரண்டு பேர் வசாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்தவர்கள்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேர் அடையாளம் காணப்பட்டனர். இதில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

பளையைச் சேர்ந்த ஒருவர் இந்த வீடுகளிற்கு வர்ணம் பூச வந்து சென்றிருந்தார். அவருக்குத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பரிசோதனையில், இவர்களிற்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

இ.போ.சவின் கோண்டாவில் சாலை, சாரதிப் பயிற்சி பாடசாலையைச் சேர்ந்த ஒருவரும் தொற்றிற்குள்ளாகியுள்ளார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர் தொற்றிற்குள்ளாகியுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் தொற்றிற்குள்ளாகியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் 3 பேர் தொற்றிற்குள்ளாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-18,33)

## தமிழர் நிலம்...

ஆக்கிரமிப்பு என்பது சத்தம் இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு பெரும் யுத்தமாக இன்று மாறியிருக்கிறது. நிலம் மட்டுமன்றி, நிலத்துடன் சேர்த்து எமது வாழ்வும் அடையாளமும் வரலாறும் சேர்த்தே அழிக்கப்படுகிறது. இது ஒரு மிகப்பெரும் மனித உரிமை மீறல் ஆகும்.

அரசாங்கங்கள் மேற்கொண்ட இந்த மனித உரிமை மீறல்களே தமிழ் மக்கள் தமது நிலத்தையும், வாழ்வையும், அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுத போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு காரணமாக அமைந்தது என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழர் தாயகத்தை இழத்தல் என்ற பேரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில், கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஞா)

## கார்...

யின் தந்தையான கந்தசாமி கனேசராசா (வயது-48) என்பவரே இவ்வாறு உயிரிழந்த வராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மாலை துவிச்சக்கரவண்டியில் மகளை கூட்டிக்கொண்டு உமையாள்புரம் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றுள்ளார்.

இதன் போது யாழிலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற கார் மோதியதில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் இரவே உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்போதனாவைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம் குமார் மேற்கொண்டார். (ஞா)

## ஆட்டோவில்...

விபத்தில் 15 பேர் பலியான பெருந்துயர் சம்பவமானது ஒட்டுமொத்த நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

குறித்த பேருந்து விபத்தில் லுணுகலை அடாவத்தைப் பகுதியைச் சேர்ந்த அந்தோனி நோவா (வயது - 32), பெனடிக் மெடோனா (வயது-31) ஆகியோரும் உயிரிழந்தனர்.

இந்தத் தம்பதி குறித்த பேருந்தை தவறவிட்டுள்ளது. ஆனால், உரிய நேரத்தில் பதுளை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக ஆட்டோவில் ஏறிச் சென்று பேருந்தை துரத்திப் பிடித்து ஏறியுள்ளனர்.

சிலவேளை பேருந்து சென்றுவிட்டது, பிறிதொரு பேருந்தில் செல்வோம் என அவர்கள் நினைத்திருந்தால் இன்று உயிருடன் இருந்திருப்பார்கள். விதி யாரைத்தான் விட்டுவைத்தது என்று மட்டுமே தற்போது கவலையடைய முடியும் என்று அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டனர்.

அதிலும் குறிப்பாக அந்தோனி நோவா என்பவர் தனது பிறந்த நாளிலேயே உயிரிழந்தும் உள்ளார். (ஞா)

## வீரசேகரவால்...

சரத் வீரசேகரவின் கருத்தினால் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவிருந்த பல நாடுகள், குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தில், இப்போது மாறு கொள்கைக்கு மாறிவிட்டன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஞா)


கற்றாழை நாற்று விற்பனைக்கு

கற்றாழை நாற்று விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 032 4040



செவன

திகதி 21/03/2021

சீட்டிழுப்பு இலக்கம் 324

R 15 36 52 53

மஹஜன சம்பத

திகதி 2021/03/21

சீட்டிழுப்பு இலக்கம் 4433

J 6 4 1 0 7 4

தரு திரி சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 31 திகதி 21/03/2021

ஆங்கில எழுத்து Z

வெற்றி இலக்கங்கள் 14 21 23 50

தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 21.03.2021

சீட்டிழுப்பு இலக்கம் 2728

ஆங்கில எழுத்து R

வெற்றி இலக்கங்கள் 39 51 70 76

தன நிதானய

திகதி - 21/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 470

A 01 32 74 80

1 1 5 2

அத கோடிபதி

கிழமை: ஞாயிற்றுக்கிழமை

சீட்டிழுப்பு இல: 1229

வர்ணம்: பச்சை

சீட்டிழுப்பு திகதி: 21.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 120,035,905

வெற்றி இலக்கங்கள் 05 38 62 67 G

வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா

கிழமை: ஞாயிற்றுக்கிழமை

சீட்டிழுப்பு இல: 3559

வர்ணம்: இளஞ் சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 21.03.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,645,025

வெற்றி இலக்கங்கள் 17 26 30 59 D

வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி

சுப்பர் ஜக்பொட் 46,84,728/=

திகதி: 21.03.2021

வெற்றி வாரம்: 3110

வர்ணம்: ஊதா

வெற்றி இலக்கங்கள் 03 27 52 54

விருச்சிகம்

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,384,200

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1403

நிறம் சிவப்பு

சீட்டிழுப்பு திகதி 21/03/2021

தினம் ஞாயிற்றுக்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 06 16 45 48

அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,000,000/=

I 07 22 46 56

சீட்டிழுப்பு வாரம் 705

மஞ்சள்

21.03.2021

ஞாயிற்றுக்கிழமை

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,103,360

தொ.பே: 0112 333 546/47

Web: www.dlb.lk

## அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=
070 3305500
077 888 9388 (C-1768)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை<br>ஆவரங்கால்<br>நெல்லியடி<br>சங்கத்தானை | பளை<br>கிளிநொச்சி<br>புதுக்குடியிருப்பு<br>முல்லை | மல்லாவி<br>மன்னார்<br>வவுனியா<br>கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## வேலைக்கு ஆட்கள் தேவை
20 - 25 வயதிற்குட்பட்டோர்கள் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-17784)

புளூபெரி கிறீம் ஹவுஸ்
BLU BERRY CREAM HOUSE
சிலையடி, சாவகச்சேரி வீதி, மந்திகை.
**077 588 0437**

## மணமகள் தேவை
1977 ஆம் ஆண்டு திருவோண நட்சத்திரம் 56 1/2 கிரகபாவம் உடைய அரசாங்க தொழில்புரியும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (6258)

**077 719 3173**

## காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1783)

**077 436 6704, 077 179 1963**

## பெண் பணியாட்கள் தேவை
எமது நிறுவனத்தில் நிரந்தரமாக பணிபுரியக்கூடிய கணனி ரைப்பிங் செய்யத் தெரிந்த பெண் பணியாட்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் வருகை தரவும். (6258)

செல்வா கொமினிக்கேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)
☎-077 728 6050

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (6266)

## வர்த்தகப் பிரிவுக்கான பிரத்தியேக வகுப்புக்கள்
366/8 1 ஆம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில்.
(ஐயப்பன் கோவில் அருகாமை)

**A/L 2023**

ஆரம்பம் :- 23.03.2021
செவ்வாய்க்கிழமை 3.00 Pm

| | |
|---|---|
| பொருளியல் | :- S. ஜெயக்குமார் |
| கணக்கீடு | :- A.T. சுரேன் |
| வணிகக்கல்வி | :- T.S. ரிஷி |

(6259)

**077 723 8597**

## புதிய பிரிவு A/L 2023 கணக்கீடு
திரு. க. பா. பாலகஜன்
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கொழும்புத்துறை - சனி, ஞாயிறு
2.15 p.m - 3.30 p.m
கந்தர்மடம் - சனி, ஞாயிறு
7.00 a.m - 8.00 a.m
Zoom class - திங்கள்.வெள்ளி
7.30 p.m - 8.30 p.m

A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள். (6215)

**077 216 8884**

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச<br>டிப்போ எதிரில்,<br>பருத்தித்துறை. | இல.01,<br>தபால் கந்தோர் வீதி,<br>சாவகச்சேரி. | இல.01, பெற்றோல்<br>செற் எதிரில்,<br>நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-1769)

## VIJAENTHIRAN MATHEMATICS CENTER
K.K.S வீதி, நாச்சி மார் கோவிலடி, யாழ்ப்பாணம்

இணைந்தகணிதம் : தெ.விஜேந்திரன் (B.Sc, Dip. in Ed.)
A/L - 2023 ஆரம்பம் 23.03.2021 செவ்வாய், வியாழன்
(4.50 p.m - 6.00 p.m)
A/L - 2021 சனி, ஞாயிறு (6.00 a.m - 7.30 a.m) (6265)

**H.A.C சித்தன்கேணியில்**
2023 சனி, ஞாயிறு 3.15 p.m - 4.45 p.m
2022 திங்கள், புதன், வெள்ளி 3.15 p.m - 4.30 p.m
2021 (வினாவிடை வகுப்பு) சனி, ஞாயிறு 6.00 p.m - 8.00 p.m

வழமையான பிரிவுகளில் நேரமாற்றம் இல்லை.

☎-077 441 3087, 070 641 3087

## விரைவு பொதிகள் சேவை
**V2 TRAVELS**
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1767)
0768226240 DHL

---

## 31 ஆம் நாள் நினைவு கூரவும்
### நன்றி நவிலலும்



தோற்றம்
18 - 11 - 1932

மறைவு
20 - 02 - 2021

## அமரர் சரஸ்வதி திருநாவுக்கரசு

கடந்த 20.02.2021 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையங்கள், மலர்மாலை சாத்தியோருக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வழங்கியோருக்கும் மரணச் சடங்கு நிகழ்வை நேரடி ஒளிபரப்புச் செய்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகளை வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (6225)

செவ்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்
076 317 7147

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
02 - 11 - 1935

மறைவு
20 - 02 - 2021

கடந்த 20.02.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் பரமாந்தர் கந்தையா ஆறுமுகம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் திருநாவலூர், தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப் பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (C-1778)

தெணியம்மன் வீதி, திருநாவலூர்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.